உ
ஓம்
பரப்பிரஹ்மணே நமஃ

ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

தொகுதி 9	உருத்ரோத்காரிஸு ஆவணிமீ கஉ 1923ஸு ஆகஸ்ட்டுமீ 17உ	பகுதி 2

கடவுள் வணக்கம்.

ஐவ ரென்றபுல வேடர் கொட்டம
தடங்க மர்க்கடவன் மூட்டியாய்
அடவி நின்றுமலை யருகி னின்றுசரு
காதி தின்றுபனி வெயிலினால்
மெய்வ ருந்துதவ மில்லை நற்சரியை
கிரியை யோகமெனு மூன்றதாய்
மேவு கின்றசவு பாந நன்னெறி
விரும்ப வில்லையுல கத்திலே
பொய்ம்மு டங்குதொழில் யாத தற்குநல
சாரதித் தொழின டத்திடும்
புத்தி யூகமறி வற்ற மூகமிவை
பொருளெ னக்கருது மருளன்யான்
தெய்வ நல்லருள் படைத்த வன்பரொடு
சேர வுங்கருணை கூர்வையோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே. (1)

எங்குஞ் சிவமே யிரண்டற்று நிற்கினெஞ்சே
தங்குஞ் சுகரீ சலியாதே—யங்கிங்கென்
றெண்ணாதே பாழி லிறந்து பிறந்துழலப்
பண்ணாதே யானுன் பரம். (2)

மெய்யைப்பொய் யென்றிடவு மெய்யிணையாப் பொய்ந்நெஞ்சே
பொய்யைத்தான் மெய்யெனவும் போகுமோ—வையமறத்
தன்மயத்தை மெய்யெனவே சார்ந்தனையே லானந்த
மென்மயமு நின்மயமு மே. (3)

அரும்பொருள் விளக்கம்.

1. ஐவரென்றவேடர்=ஐம்புலன்களாகிய வேடர்.
கொட்டம்=அகங்கார நடக்கை ; பொல்லாத நடக்கை.
மர்க்கடவன்=குரங்கு.
முட்டி=கைப்பிடி.

'குரங்குப்பிடி' என்றால் பிடித்ததை விடாது பற்றியிருத்தல்.

மெய்வருந்து தவம் இல்லை=தேகத்தை வருத்தும் தவம் செய்யவில்லை.

சவுபான நன்னெறி=படிகளாகிய நல்ல மார்க்கங்கள். அவை சரியையாதி மார்க்கங்களாம்.

பொய் முடங்குதொழில்=அசத்தியமான விஷயங்களைப்பற்றியதொழில்.
அமல=மலமற்ற, அதாவது பரிசுத்தமான.
சிற்சுக உதய விலாசம்=ஞான சுகாரம்பமான லீலை.

2. எங்கும் சிவமே இரண்டற்று நிற்கின்=முன்னிலைச் சுட்டின்றி (அதாவது தனக்கன்னியமாக ஒன்றிருக்கும் உணர்ச்சியின்றி) யாவும் ஒரே அகண்டமாகிய சிவசொரூபமாய் உணர்வதாகிய ததாகார நிலையில் நிற்கின்.

(" பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே " என்று இம்மகானே அருளியுள்ள நிலையே அந்நிலையாகும்.)

" அங்கிங்கென்றெண்ணாதே "—காலதேசபரிச்சேதங்களற்ற நிலையில் நில் என்பதாம்.

அத்தகைய ஞாதுரு ஞேயங்களற்ற சுத்தஞான நிலையை யெய்தாவிடின் பிறப்பிறப்பொழியாவாதலின் " பாழிலிறந்து பிறந்துழலப் பண்ணாதே" என்று மனதை நோக்கி அறிவுறுத்தினர்.

3. மெய்யைப் பொய் என்றிடவும்=சச்சிதானந்த சொரூபமே என்று மழியாத பொருளாய் நீக்கமற எங்கும் நிறைந்து நிற்க, அந்த உண்மையையறியாது அதைப் பொய்யென மதிக்கவும்.

பொய்யைத்தான் மெய்யெனவும்=மாயா தோற்றமாகிய அநித்தியப் பிரபஞ்சத்தை மெய்யென்று மதிக்கவும்.

போகுமோ=தகுதியாகுமோ? (ஆகாது என்றபடி)

தன்மயத்தை மெய்யெனவே சார்ந்தனையேல்=உனது ஆன்ம சொரூபமே மெய்யென்றுணர்ந்து, உன் நிஜவடிவைக் கண்டு அந்நிலையி லமர்வாயாயின்.

தற்போத வொழிவில் உதிக்கும் ஆநந்தநிலையில் சத்துவமனமும் விலீனமாய் விட்டு எல்லாம் ஒரே ஆநந்தமாய் விளங்குவதால் " என் மயமும் ன் மயமும் ஆநந்தமே " என்றார்.

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரிஸு ஆவணிமீ கஉ

பாதிரிகளின் படுமோசம்.

18-வயதுள்ள பெண் பறி கொடுக்கப்பட்டாள்.

நாம் நமது மக்களை அதிலும் முக்கியமாய்ப் பெண் மக்களைப் பாதிரிகளின் பாடசாலைக்கனுப்புவதால் நேரிடும் பெருந்தீங்குகளைப்பற்றித் திருட்டாந்தங்களோடு பன்முறை வெளியிட்டிருந்தும் நம்மவர் கவனியாது நவீன நாகரீக மயக்கேறிக் கடைசியில் தம் கண்மணிகள் போன்ற மக்களையுயிரோடு பறிகொடுத்து ஆவி சோர்ந்து அவதிப்படுகிறார்கள்.

இப்போது இச்சென்னையில் நடந்திருக்கும் சம்பவம் இதை வாசிக்கும் ஒவ்வொரு ஹிந்துவின் மனதையும்—அக்கிரமத்தை வெறுக்கும் குணமும் ஜீவகாருண்யமும், பாபத்திற்கஞ்சும் தன்மையுமுடைய எவர் மனதையும்—கொதிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அச்சம்பவம் பின் வருமாறு.—

சென்னையிலுள்ள பிரசித்திபெற்ற சிற்பியாகிய ம-ா-ா-ஸ்ரீ, நாகப்பா என்பவருடைய மைத்துனியாகிய, 18-வயதுள்ள பங்கஜம்மாள் என்ற கன்னிகை மைலாப்பூரிலுள்ள C. E. Z. மிஷன் பாடசாலையில் 2-வது பாரம் வரையில் வாசித்துக்கொண்டிருந்தாள். புத்தி யறிந்தபின் நின்றுவிட்டாள். அந்தோ அவள் நின்றுவிடினும் அவளைக் கொண்டுபோகக் கண் வைத்திருக்கும் பாதிரிமார் சும்மா விடவில்லை. பைபில் உமன் என்ற ஒரு உபாத்தினி வீட்டிற்கு வந்து கல்வி, ஸங்கீதம், தையல் முதலியவற்றைக் கற்பித்துக்கொண்டிருந்தாள். கடைசியில் 14-7-1923 சனிவாரம் இரவு சுமார் பனிரண்டு மணிக்கு பங்கஜம் மாயமாய்ப் போய்விட்டாள். அவள் உபாத்தினியும் மறைந்துவிட்டாள். பங்கஜத்தின் வயது முதிர்ந்த தாயார் தன் செல்வப்புத்திரியின் பிரிவாற்றாமல்

ஆவிசோர்ந்து பைத்தியங்கொண்டு மிக்க பரிதாபமும் ஆபத்து மான நிலைமையிலிருக்கிருள்.

இந்த விஷயத்தைத் தொடர்வதற்கிடையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறோம். ம-ா-ா-ஸ்ரீ, நாகப்பா சினேக ரிடத்தில், அன்பும், ஜீவகாருண்யமும், பரோபகாரமும், பெருந் தன்மையும், மரியாதையும் வாய்ந்தவர். அத்தகைய ஒருவருக்கு அக்கிரமமான இவ்விபத்து நேர்ந்ததற்காக நமது மனப்பூர்வ மான அநுதாபத்தை வெளியிடுகிறோம்.

இரண்டு நாட்கள் வரையில் பங்கஜத்தின் பெற்றோரும் சுற் றத்தாரும் கண்ணீர் சொரிந்துகொண்டே அவளைத் தேடியலைந் தார்கள். அதன்பின் பங்கஜம் புரசப்பாக்கத்திலுள்ள ஸெனு மிஷன் சங்கத்திலிருப்பதாகத் தெரியவந்தது. நாகப்பாவும் அவர் மனைவியுமாக அங்குசென்று விசாரித்தபோது பங்கஜம் அன்றே 400-மைல் தூரத்திலுள்ள பாளையங்கோட்டைக்கு அனுப் பப்பட்டதாகத் தெரிந்தது.

அவர்கள் கூறுவதாவது, "பங்கஜத்திற்கு வயது வந்துவிட் டது. அவள் கிருஸ்து மார்க்கத்தைத் தழுவிக்கொண்டாள்" என்பதே. இதுவும் நல்ல வேடிக்கையே. உண்மையில் நமது பெண்களை அவர்கள் பாடசாலைக்கு அனுப்பும்போதே எமனிடம் ஒப்பித்து விடுகிறோம் என்று பெற்றோர் கருதவேண்டும். ஏனெ னில் நமது பெண்கள் அங்கு வாசிக்கும்போதே அவர்களுக்கு நயவஞ்சகமாய் நமது மதாசாரங்களில் வெறுப்பை யுண்டாக்கி, மாயபோதனைகளாகிய கொடிய விஷத்தைப் பூரணமா யூட்டி விடுகிறார்கள். பிறகு அவர்கள் வயது வந்து வீட்டில் தங்கும் போது பைபில் உமன்கள் என்ற உபாத்தினிகள் தந்திரமாய்ப் பசப்பு வார்த்தைகள் கூறி "எங்களுக்குச் சம்பளம்வேண்டாம். இலவசமாக நமது குழந்தைக்குக் கல்வி போதிக்கிறோம்." என்று பெற்றோர்களை மயங்கச்செய்து,பெண்ணுக்கு இரகசியமாய்ப் போ தித்துக் கொஞ்ச நாட்களுக்குள் நடு இரவில் பெண்ணை இரகசிய மாய் வெளிவரச் செய்து அழைத்துப்போய், தங்கள் பாடசாலை கள் முதலிய ஒரு இடத்தில் மறைத்துவைத்துச் சீக்கிரத்தில் தூரத் திலுள்ள தங்கள் ஸ்தலங்களில் ஒன்றுக்கு அனுப்பி விடுகிறார்கள்.

கிருஸ்து மதத்தைத் தழுவியது என்பது பெரும்பொய்யான சாக்கேயன்றி வேறில்லை. தன் மதம் இன்னதென்று தெரியாத

17—18 வயதுள்ள பெண், தன் மதத்தில் சரியான மோட்சமார்க்கமில்லையென்றும், கிருஸ்து மதத்தில் இருக்கிறதென்றும் உணர்ந்துகொள்வது சாத்தியமென்று மூடனும் கருதமாட்டான்.

அந்தப்பெண் தன் மனம்ாரக் கிருஸ்துமார்க்கத்தில் சேர விரும்பின் பகிரங்கமாய் யாவர்க்கும், முக்கியமாய்ப் பெற்றோர்க்குக் கூறி யப்படிச் செய்யலாமே. பாதிரிகளேனும் பெற்றோர்க்கறிவித்து அப்பெண்ணைத் தங்கள் மதத்தில் சேர்த்துக் கொள்ளலாமே. ஒருவருமறியாதபடி இப்படிக்கொண்டு போவானேன்? பிறகும் அவள் சுற்றத்தார்கூட அவளைக் காணாதபடி கடுஞ்சிறையில் அவளை யடைத்து மறைத்து வைப்பதேன்? அப்படி வைப்பதே யவர்கள் வழக்கம். உடனே தூரதேசம் கொண்டு போவதேன்? 18-வயதுள்ள ஒரு ஹிந்துப்பெண் நடு இரவில் தனியே வெளியில் செல்லுமோ. உபாத்தினியோ அவர்களைச் சேர்ந்தவர்களோ வீட்டருகில் வந்திருந்து, முன் செய்த ஏற்பாட்டின்படி பெண்ணை கள்ளத்தனமாய் அந்த வேளையில் வெளிவந்து விடச் செய்து அழைத்துக்கொண்டு போயிருக்கவேண்டும். இந்நடக்கைகளால் விஷயத்தின் உண்மை பட்டப்பகல்போல் விளங்குகிறதன்றோ. இதில் எள்ளளவு சந்தேகந்தானேது?

இனி இவர்கள் செய்கை இவர்கள் மதத்திற்கு அங்கீகாரமானதா, ஏசுக்கிருஸ்துவுக்குத் திருப்தியானதா என்று சற்று ஆராய்வோம். ஏசுகிருஸ்து மிக்க பரிசுத்த உள்ளமும் ஜீவகாருண்யமுமுடைய மகான் என்பது தெரிந்த விஷயம். அவருடைய மலைப்பிரசங்கம் ஒன்றே அந்த உண்மையை விளக்கும். அவருக்கேனும், அவரிடம் மெய்யான பக்தியுடைய உண்மைக் கிருஸ்தவர்களுக்கேனும் ஜீவகாருண்யமற்ற இச்செய்கை சம்மதமாகுமோ. பலர் மனம் புண்பட்டு அவர்கள் மரண பரியந்தம் தீராவியாகூலத்தில் ஆழ்ந்து விடும்படிச் செய்வதைவிட பாதகச் செயல் வேறென்னவிருக்கிறது? அத்தகைய காரியத்தைச்செய்து பிறமதத்தவரைத் தமது மதத்திற்கு இழுக்கும்படி ஏசுகிருஸ்து கூறியிருக்கிறாரா? அவர் மேலும் அவர் தாபித்தமதத்தின் மேலும் பிறமதத்தினர்க்கு வெறுப்பும் இழிவும் உண்டாக்கத் தக்க காரியத்தைச் செய்வோர்கள் அவருடைய பக்தர்களாய் அவர் கருணைக்குரியவர்களாவார்களா அல்லது அவருக்கு விரோதிகளாகக் கருதப்படுவார்களா?

இத்தகைய காரியங்களைச் செய்வோர்களில் பலருக்கே அம் மதத்தில் நம்பிக்கையும் விசுவாசமுமில்லை யென்பதை அவர்களிடம் பழகுவதால் நன்கறியலாகும். அப்படியிருந்தும் அவர்கள் இவ்வாறு அன்னிய மதத்திலுள்ளவர்களை வஞ்சகமாய்த் தங்கள் மதத்திற் கிழுப்பானேனெனில், பணமே அதற்குக் காரணம். இவர்களனைவரும் சம்பளமாகிய கூலிக்கு இவ்வேலை செய்கிறவர்களேயன்றி வேறில்லை.

ஒரு சாதாரணமனிதன் அப்பெண்ணை அந்த விதமாய்க் கொண்டுபோயிருந்தால், "அவளுக்கு வயது வந்துவிட்டது; தன் இஷ்டப்படி வந்தாள்" என்று கூறினும், அவன் ஒருவர் பாதுகாப்பிலிருந்தவளைக் கள்ளத்தனமாய்க் கொண்டுபோனதற்காகச் சட்டப்படி தண்டிக்கப்படுவானன்றோ. உபாத்தினிகளின் மாய ஜாலங்களில் மயங்கி மோசம்போன பங்கஜம், தன் வீட்டிற்கெழுதிய கடிதத்தில் தான் பாளயங்கோட்டையில் ஒரு பயங்கரமான இடத்திலிருப்பதாகவும், அக்காள் அம்மாள் முதலியவர்கள் வந்தால் தன்னைப் பார்க்கலாம் என்றும், அத்தான் முதலியவர்கள் பார்க்க முடியாதென்றும் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதோடு அக்கடிதத்தை யவள் பயத்தோடு கள்ளத்தனமாய் எழுதியதாகத் தெரிகிறது. ஏனெனில் அக்கடிதத்திலேயே அக்கன்னிகை அங்குள்ள கிருஸ்தவர்களின் உத்தரவன்னியில் தான் கடிதம் எழுதமுடியாது என்று வரைந்திருக்கிறாள்.

இதனால் அப்பெண் மனப்பூர்வமாய்ச் சென்றதென்பது எவ்வளவு வரை யுண்மையென்பதும், அவளது சிறைவாசத்தை விட துரைத்தன சிறைச்சாலையின் வாசம் மேலானதென்பதும் நன்கு விளங்கும்.

பெண்கள் வந்தால்மட்டும் பார்க்கலாம். ஏனெனில் அவர்களைச் சுலபத்தில் ஏமாற்றிவிடலாம். ஆடவராகிய சுற்றத்தாரைக் கண்டால் அப்பெண் "அய்யோ என்னை அழைத்துக்கொண்டு போய்விடுங்கள். நான் புத்தி தெரியாமல் மோசம் போய்விட்டேன்" என்று கூறுவாள் என்ற பயத்தாலோ அல்லது இன்னும் வேறென்ன இரகசியங்களைக் கூறிவிடுவாளென்ற பயத்தாலோ தான் அம்மாதிரி சுற்றத்தாரைக் காணவிடாது தடுக்கிறார்கள்.

அந்தோ இதற்கு நீதியில்லையோ? நம் நாட்டில் துரைத்தனமில்லையோ? இருக்கிறது. அதிலும் பாரபட்சமற்ற காருண்யமான துரைத்தனமே யிருக்கிறது.

இரண்டொரு மாதங்களுக்குமுன் சென்னை வேப்பேரியி லுள்ள ஆங்கிலோ இந்திய வகுப்பினரில் மரியாதையான குடும்ப த்தைச் சேர்ந்தவர்கள் இங்கிலாந்திலுள்ள தாய்தந்தையற்ற டோரிஸ் ஹாக்கர் என்ற ஒரு பெண்ணை வளர்த்துக்கொள்வதற் காக எவ்வளவோ சிரமப்பட்டு அங்கிருந்து வரவழைத்தார்கள். அவர்கள் அசல் ஐரோப்பியர்களல்லாததால் அச்சிறுமி அவர்க ளுக்குப் பெண்ணுவது அகௌரவமென்றெண்ணி அவர்களுக்கு நேர்ந்த செலவை யளித்துவிட்டு அப்பெண்ணுக்குக் கப்பல்செலவு முதலியவையும் கொடுத்து அனுப்பிய நம் காருண்ய திரைத்தனத் தார் நாம் நமது மக்களை யிப்படிப் பறிகொடுத்துத் தீராத் துயரை யடையும்படி விட்டுவிடுவார்களோ ?

ஆனல் அழுதபிள்ளையன்றே பால் பெறும். நாம் இத்தகைய ஆபத்துகளுக்குள்ளாவது முக்கியமாய் நமது அறியாமையா லேயே. நாம் நம் பெண்களுக்குப் பெருந்தீங்கிழைக்கிறோம். ஹிந்துக்களாகிய நமக்கு மதமே பிராணனிலும் சிறந்தது. மத மொழிந்தால் பிறகு நாம் ஒரு ஜாதியாரென்பதே யொழிந்து போம் என்ற உணர்ச்சி நம்மவர்க்கு இன்னும் உதிக்காமலிருப்பது மிக்க வியப்பே. நம் ஆண்மக்கள் ஆங்கிலம் படிப்பதால் அவர் கள் மதாசாரங் குன்றிப்போவது தெரிந்த விஷயம். ஆயினும் பெண்மக்களால் அவர்கள் வரம்பு கட்வாமல் காக்கப்படுகிறார் கள். அப்படியிருக்க நம்மவர் தம் பெண்மக்கள் ஆடவரைப் போல் ஆங்கிலங் கற்கவேண்டுமென்று விரும்புவது பெருந் தீங்கை விளைவிக்கும் விபரீத புத்தியேயாகும். இந்த மூட மயக் கங்கொண்டு பெண்களை அன்னியமதப்பாடசாலைகளுக்கு அனுப் புவது சுத்த அறியாமையேயாகும். அதோடு போகாமல் அம்மத உபாத்தினிகளை வீட்டிற்கு வரவிட்டுத் தம் செல்வச் சிறுமிகளைப் பறிகொடுத்துப் பரதவிப்பது நமது மூடத்தனமேயன்றோ! எமன் உடலையேனும் கொஞ்சநேரம் நாம்வைத்திருக்கவும்,வளர்த்தகரத் தால் அழித்துவிடவும் விட்டு ஆவியைமட்டும் கொள்ளை கொண்டு போகிறான். அந்தோ! பெண் எமன்கள் போன்ற இவ்வுபாத்தி னிகள் உடலையுமன்றோ கொண்டுபோய்விடுகின்றனர்.

நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் நம் தலைவர்களும், மந்திரிகளும் இத்தகைய ஆபத்துகளைத் தடுக்க முயலாவிட்டால் பிறகு இவர்களது மற்ற உழைப்பெல்லாம்

என்ன பயன் பெறுமோ நமக்குப் புலப்படவில்லை. இந்து சமூகத்தார் இனியேனும் தக்க முயற்சி யெடுத்துக்கொள்ளாவிடின் இத்தகைய ஆபத்துகள் வளர்ந்துகொண்டேபோய்க் கடைசியில் பெரிய ஆபத்தில் முடியுமன்றோ. இவ்விஷயத்தைப்பற்றி நம் பத்திரிகைகளனைத்தும் முறையிடுவதை நமது மந்திரிகள் கவனிப்பார்களோ ?

சில தினங்களுக்கு முன் துரைத்தனத்தார் உதவிபெறும் பாதிரிமார்கள் பாடசாலையில் வாசிக்கும் கிருஸ்தவரல்லாத மாணவர்களுக்கு கிருஸ்து மத வேதம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப் படலாகாது என்று சென்னைச் சட்டசபையில் ஒரு பிரேரபனை கொண்டு வரப்பட்டது. அப்போது ஜஸ்டிஸ் கட்சியார் அதற்கு விரோதமாக நின்று அதைத் தோற்கடித்து விட்டார்கள். கடவுளே ! நம்மவர் இப்படிக் கக்ஷிப்பிரிவினை செய்துகொண்டு நமக்கு நாமே தீங்கிழைத்துக்கொண்டால் நாம் முன்னேற்றமடைவது முயற்கொம்பாகவன்றோ முடியும். ஆண்டவன் நம்மவர்க்கு நல்லறிவளிப்பாராக.

ஓம் தத் ஸத்.

சந்நியாசமும் பொறுமையும்.

கடந்த மாதச் சஞ்சிகையில் பிரம்மஸ்ரீ சிவானந்தசாகர யோகீஸ்வரரவர்கள் வரைந்த சந்நியாசம்—துறவு என்ற விஷயத்தில் சந்நியாசத்தைப்பற்றி விரிவாய் வரைந்துள்ளார்கள். அதையே சுருக்கமாய் இக்கால அநுபவத்தோடு ஒத்திட்டு வரையக் கருதினேம்.

சாதாரணமாக பிரம்மசரியம், இல்லறம் இந்த இரண்டு ஆசிரமங்களிலும் விதிப்படி யொழுகிய பின்னரே ஒருவன் சந்நியாச ஆசிரமத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்பது விதி. ஏனெனில் பிரமசரிய ஆசிரமத்திலிருக்கும்போது குரு முன்னிலையில் சாத்திர விசாரணைசெய்து பரோக்ஷமாக வேனும் நித்தியா நித்திய வஸ்து விவேகம் பெற்றிருக்கிறான். ஆயினும் பூர்வவாசனையால் உலகபோக விச்சை யொழியாது. ஒருசமயம் பாலிய பருவத்தில் விராகம் தோன்றினும் அது மந்தவிராகமாக விருக்குமேயன்றி நிலைத்திராது. யௌவன பருவம் வந்த காலத்து உலகபோக வாசை யெழும்.

ஆதலின் அக்காலத்தில் தனக்குத் தகுதியான ஒரு குலக்

கன்னிகையை வரித்துக்கொண்டு இல்லறம் விதிப்படி நடத்துவதால் நிஷ்காம புண்ணிய கர்மத்துவாரா சித்தசுத்தி யுண்டாகிறது. அதோடு உலகபோகங்களை யனுபவிப்பதால் "சே! இன்னும் எவ்வளவு காலம் அனுபவித்தாலும் இவ்வளவுதானே. இப்படி எண்ணிறந்த ஜன்மங்களில் அனுபவித்தே யிருக்கிறோம். ஒன்றேனும் நிலைத்திலது. முடிவில் இவையாவும் அநித்தியமே. இந்த அநித்தியமான அற்ப போகத்திற் கிச்சை வைப்பதால் பலவித துன்பங்களை யனுபவிக்க நேர்கிறது. பிறவிப்பிணியோ ஒழிந்திலது. சீ சீ இனி யிதைவிட்டு அழியாத பேரின்பத்தை யடைய முயலவேண்டும்" என்ற இவ்விதச் சிந்தனைகளால் விராகம் ஜனிக்கிறது. இச்சை யொழிகிறது. இச்சை யொழியவே மனோலயம் எளிதில் சித்திக்கிறது. அப்போதுதான் ஏகாந்தத்திலிருந்து நிட்டை சாதித்து ஆன்ம சாட்சாத்காரத்தை யடையத் தகுதியான பக்குவம் வாய்க்கிறது. ஆகையால் அதுதான் சந்நியாசம் பெறற்குரிய காலம் என்று விதிக்கப்பட்டது.

அத்தகைய சந்நியாசிக்கு மறுபடி உலகபோக இச்சை யெழாது. அவன் அப்போகங்களை வாந்தியசனம்போல் கருதுவான். மற்றபடி சாதாரணமாக உலகபோகங்களை யொருவன் எவ்வளவு காலம் அனுபவித்தாலும் அதில் விரக்தி யுண்டாவதில்லை. வயோதிகம் வந்தவனுக்கும் போகங்களை யனுபவிக்கும் சக்தியில்லை யெனினும் ஆசைமட்டும் ஒழிவதில்லை.

சந்நியாசத்திற்கு **விராகம்** அதாவது இகலோக பரலோக போகங்களில் வெறுப்பு ஒன்றுதான் காரணம். அதன்றி காஷாயம், உருத்திராக்கம், தண்டு, கமண்டலம் முதலிய சின்னங்கள் காரணமல்ல. அதாவது உலகபோக ஆசை மனதைவிட் டகலாதிருக்க சந்நியாசிவேட மட்டு மணிந்துகொள்வது பெரும் பாதகமாகும். சாதாரண மனிதர் போகங்களை யனுபவிப்பதால் கர்மத்தை யீட்டுகிறார்கள். ஆனால் போக இச்சையுடைய சந்நியாசிக்கோ கொடிய நரகம் பிராப்தமாகும்.

இக்காரணங்களாற்றான் நம் நாட்டில் ஒருவன் சந்நியாசியாவதெனின் தக்க குருவினிடமே அதைப் பெறவேண்டும் என்ற விதியுண்டு. அவர் அவன் இந்திரியங்களைச் செயித்தவனா? மனவொடுக்கம் வந்தவனா? இகபரவிராகம் பெற்றவனா என்று சோதித்து தகுதியுடையவன் என்று அறிந்தபின்பே அவனுக்குச் சந்நியாசமளிப்

பார். ஒரு சந்நியாசியை நோக்கி "உனக்கு யார் சந்நியாசமளித்தது?" என்று கேட்டால் அவன் அக்குரு இன்னுரென்று கூறுவான். அதன்மேல் அவன் சரியான சந்நியாசியாகத்தான் இருப்பான் என்று உணர்வார்கள்.

இக்காலத்திலோ எல்லாம் தலை தடுமாற்றமாகவே யிருக்கிறது. இக்காலத்தில் வித்வான், வெண்பாப்புலி, அஷ்டாவதானம், சதாவதானம் என்று அவரவர்களே பட்டம் சூட்டிக்கொள்வதுபோல் சந்நியாசிகளும் நமது நாட்டில் மலிந்துவிட்டார்கள். சரியாக இருபது வயதுகூட ஆகாதவர்களும் உயர்ந்த மல்லை ஜாப்ரா விரையில் சாயம் தோய்த்துக் கட்டிக்கொண்டவுடன் சந்நியாசிக ளாகிவிடுகிருர்கள். சிரசை முண்டனம் செய்துகொள்வதும் கஷாயமும் கழுத்தில் ஒரு உருத்திராக்கமும் அணிந்து கொள்வதுமே சந்நியாசம் பெறுவதற்கு வேண்டிய யோக்கியதை யென்று கருதுகிருர்கள்.

ஒருவனுக்குப் பூர்வ ஜன்மத்தின் விட்ட குறையால் ஆரம்பத்திலேயே விரக்தி ஜனிக்கலாகும்; ஏன், ஞானமே உதிக்கலாகும். அத்தகையோர் சந்நியாசம் பெறற்குக் காலவரையே யில்லை. அவன் எச்சாதியாயினும், என்ன வயதுடையவனுயினும் அவசியமில்லை. ஆனுல் அப்படி நேரிடுவது மிக அரிது. இந்த பாலிய சந்நியாசிகளுக்கு இச்சை யொழிந்ததென் றெங்கேனுங் கருதத்தகுமோ. இவர்களில் பெரும்பாலார்க்குக் கல்வியேயில்லை. சிலர்க்குக் கஷ்டத்தோடு வரிசையாய் எழுத்துகளைப் படிக்கமட்டும் தெரியுமாதலால் சிறு நூல்களைப் பொருளறியாமலே மனப்பாடம் செய்கின்றனர். இவர்கள் பிரத்தியட்சமாய்க் காணும் பலன் என்னவெனில் கஷ்டப்படாமலே அன்னியர் கர்மத்தைப் புசித்தலே. இதனுல் சோம்பலுக்குத் தோழராகிருர்கள். உண்மை விரக்தியடைந்து சந்நியாசம் பெற்றிருப்பவனைப்பற்றி நாம் கூறவில்லை. இவர்களுக்கு எள்ளளவேனும் இச்சை யொழியவில்லை. இந்திரியங்களை நிககிரகிக்கும் சக்தியாவது மனதை யடக்கும் சக்தியாவது சற்றேனுமில்லை. அறுசுவை யுணர்ச்சி யொழியவில்லை. பெரும்பாலும் இவர்களுக்கு இந்திரியங்களையும் மனதையும் வேறு பிரித்தறியவே முடியாதெனில் இவர்கள் அவற்றை யடக்குவதெப்படி? இவர்கள் சந்நியாசகோல மணிவதிலும் ஒழுங்கு தேடுகிருர்கள். உயர்ந்த மல், வெண்பட்டு, சரிகை வேட்டி இத்தகைய

வற்றிற்கு ரோஜா நிறச் சாயமேற்றி யணிதல், பொன்மலர் கட்டி இரத்தினங்களிழைத்த உருத்திராக்கமணியைப் பொன் கயிற்றில் கோத்தணிதல், இன்னும் பலவுள.

சந்நியாச மடைவது உலகவிவகாரங்களை யடியோடொழித்துக் கிரியையற்று, சதா ஆன்ம சாக்ஷாத்கார நிலையிலிருக்கச் சாதனை செய்வதற்கே யன்றி வேறில்லை. ஆனால் இப்போதுள்ள சந்நியாசிகளில் பலர் இல்லறத்தானுக்கிருக்கும் தொல்லைகளைக் காட்டிலும் அதிக தொல்லைகளை வைத்துக்கொண்டு அல்லற்படுகிறார்கள். இத்தகையார் சந்நியாசத்தால யாதுபயன்? இவ்வகைச் சந்நியாசிகள் மலிந்து காணப்படுவதால் அநத ஆசிரயத்துக்குரிய மதிப்பு இல்லாமற்போகிறது. சந்நியாசிகள் பூசிக்கத்தக்கவர்களாகக் கருதப்படவேண்டியிருக்க, அதற்கு மாறாக உயர்தர யாசகராகவும், வெளி வேடக்காரராகவும கருதப்படுகிறார்கள். போலிச் சந்நியாசிகளால் மெய்யான சந்நியாசிக்கும் மதிப்பில்லாமற் போகிறது.

நாவின் ருசியையும் ஸ்திரீ யிச்சையையும் ஜெயித்துவிட்டால் எல்லாக் கஷ்டமும் ஒழிந்ததாகும் என்று ஒரு ஞானி கூறியுள்ளார். ஸ்ரீ சைதன்னியசுவாமிகள கேசவ பாரதிபாரிடம் சென்று தமக்குச் சந்நியாசம் அளிக்கும்படி வேண்டியபோது அவர் சைதன்னியரை நோக்கி “ நீ நல்ல வாலிபமும் மிக்க அழகுமுடையவனாக இருக்கிறாயே. உனக்குச் சந்நியாசமளிக்க யாருக்குத் தீரமுண்டாகும்?” என்றனர்.

சைதன்னியர் “ சுவாமி! ஒருவனுக்குச் சந்நியாசமளிக்குமுன் அவனைச் சோதியுங்கள். நான் சந்நியாசம் பெறத் தகுதியுடையவனாயின் தாங்களே எனக்குச் சந்நியாசமளிக்கப் பிரியப்படுவீர்கள். ஆகையால் அடியேனைச் சோதித்துப் பாருங்கள்” என்றார். அதன்மேல் கேசவபாரதி சைதன்னியரை நோக்கி “ உனது நாவை நீட்டென்றார், அவர் நீட்டியதும் பாரதி கொஞ்சம் சர்க்கரையை நாவின்மேல் வைத்தார். சற்றுநேரம் அப்படியே யிருந்தபோது சர்க்கரை கரையாமலே யிருந்தது. பிறகு ஊதியபோது உடனே சர்க்கரை தூளாய்ப் பறந்துபோயிற்று. ஏன்? நா அதன் ருசியை யுணர்ந்திருப்பின் நாவில் நீர் சுரந்து சர்க்கரை கரைந்துபோயிருக்கும். உணர்ச்சியில்லாததால் கரையவில்லை.

அதற்குமேல் அவரைச் சோதிக்கவேண்டியதில்லை. ஏனெனில் எப்போது இரச உணர்ச்சி வெல்லப்பட்டதோ அப்போது மற்ற எல்லாம் வெல்லப்பட்டதாகும்.

"அறுசுவையின் குணங்குற்ற மசுத்தம் சுத்தமென வாராய்ந்திடாம
லண்டினதைக் காட்டுத்தீபோ லருந்துபவன் மாபோகியாகும்"
(கைவல்யம்)

இத்தகையோ ரன்றே சந்நியாசத்திற் கருகராவோர்.

சந்நியாசிகளுக்குச் சாதுக்கள் என்றும் பெயர். அதாவது அகங்காரத்தை யொழித்துவிட்டுக் கோபமின்றிச் சதா சாத்மீகத்தோடு பொருந்தியிருப்பவர்கள். பொறுமை யாவர்க்குமே இருக்கவேண்டிய மகா மேலானகுணம். "பொறுமை கடலினும் பெரிது" என்றனர் ஆன்றோர். இத்தகைய பொறுமை சந்நியாசியிடம் சதா இருக்கவேண்டும். இல்லற வாசிகள் எப்போதும் பொறுமையாயிருப்பது மிகக் கஷ்டமான காரியமே. இல்லறத்தில் அடியோடு கோபமே காட்டாதிருந்தால் மிக்க அனுகூலம் நேரிடும். கோபம் ஓர் பேய் போன்றது. நான் எனது என்பதிருக்கிறவரையில் கோபம் ஒழிந்தபாடில்லை. தனக்காவது தன்னைச் சேர்ந்த உயிர்ப்பற்று பொருட்பற்றுகியவைகளுக்காவது ஒருவர் இடையூறு செய்தால் உடனே கோபம் கொதித்தெழும்புகிறது. பேய்வயப்பட்டவனுக்குத் தான் செய்வது நல்லது கெட்டது என்ற அறிவு விளங்குவதில்லை. அதுபோன்றே கோபப்பேயின் வயப்பட்டவனும் ஆத்திரத்தால் தன்னை மறந்து கொடும்பாதகச் செயல்களைச் செய்துவிடுகிறான்.

இதனாற்றான் கோபம் சண்டாளம் என்றும் பெரும்பாதகத்தை யுண்டாக்கத்தக்கதென்றும் கூறப்பட்டிருக்கிறது. குற்றம் செய்தபோது பெற்றோரும், உபாத்தியாயரும் பிள்ளைகளைத் தண்டிப்பதுபோல் பிறர் நலத்தின் பொருட்டுக் கோபங் காட்டுவது இல்லறத்தில் அவசியமே. அதனாற் குற்றமில்லை. சாதாரணமானவர்கள் கோபம் கெட்டதென்ற காரணத்தால் அது உண்டாகும்போது மறவாமல் அதைக் தடுத்தடக்கப் பழகவேண்டும்.

தற்செயலற்று, எல்லாம் ஈசன் செய லெனா உணர்ந்து, யாவும் அவன் சொரூபமாகவே காணும் அனுபவம்வரின், அப்போதுதான் கோபமும அதன் மூலமாகிய அகங்காரமும் இயற்கையிலேயே இல்லா தொழியும். சந்நியாசி அத்தகைய நிலையி

விருக்கவேண்டியவன். எப்போது இச்சை யொழிந்து விராகம் ஜனித்ததோ அப்போதே அகங்காரமமகாரங்க ளொழிந்தன. சந்நியாசி யாவற்றையும் தன் ஆன்ம சொரூபமாகவே காணவேண்டியவன் ஆகையால் அவன் சர்த்மீகமூர்த்தி அல்லது சாது என்று கூறப்படுகிறான்.

உண்மைச் சந்நியாசிகளையும் போலிச் சந்நியாசிகளையும் பிரித்தறிவது அதிக கஷ்டமானகாரியமல்ல. வேடத்தைவிட்டுக் குணத்தாலும், நடக்கையாலுமே உண்மையை யறியலாகும். உண்மையான சந்நியாசிகளைக் கண்டால் அவர்கள் ஜாதி குலம் முதலிய ஒன்றையும் கவனியாமல் அவர்களைப் பரமேசுரனாகவே பாவித்து நடந்துகொள்ளவேண்டும்.

சீடன்.

கம்பராமாயண நீதிச்செய்யுள்.

(456-ம் பக்கத் தொடர்ச்சி.)

(25) கறங்கெனத் திரியும் வேகக் கவிக்குலம் கதுவ வாங்கிப்
பிறங்கிருங் கடலிற் பெய்த போழ்தத்தும் பெரிய பாந்தள்
மறங்கிளர் மான யானை வயிற்றின வாக வாய்சோர்ந்
துறங்கின கேடுற் றலு முணர்வரோ வுணர்வி லாதார். (சேது-20)

(இ-ள்.) காற்றாடிபோல மிக்க வேகமாகத் திரிந்துகொண்டிருக்கின்ற வானரங்கள், பெரிய பருவதங்களைப் பிடுங்கிச் சேதுபந்தனஞ் செய்யக் கடலிலெறிந்த காலத்தும், அம்மலைகளில் வசிக்கும் மலைப்பாம்புகள் வலிய யானைகளை விழுங்கிவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தன. அறிவில்லாதவர்கள் துன்பத்தை யடைந்தாலும் உணர்வுடையராவரோ? (ஆகார். என்றபடி) (எ-று.)

அறிவிலார் தாம்புரியும் கள்ளல், கள்ளுண்ணல், பிறர்மனை நயத்தலாதிய தீச்செயல்களாற் றுன்புற்ற காலத்தும் வருந்தித் திருந்தார். வருந்தினும் அத்துன்பத்திற்காக வருந்துவரேயன்றிக் குற்றத்தினிமித்தம் வருந்துவதில்லை. அங்ஙனம் பச்சாத்தாபப்படுவரேல் மீட்டும் புரியத் துணிவரோ? தீயவை தீயபயக்குமென்றறிந்தும், களவாடிக்கசையடியுண்டோனையும், சூதாடிச் சொத்துக்களை யிழந்து பஞ்சையாகப் பரிதபிப் போனையும், கண்டோர் கைகொட்டி நகைக்கத் தரையில் விழுந்து புரளும் குடியனையும் கண்கூடாக் கண்டும் அவற்றை யஞ்சா தியற்றுநரைக் காண்கின்றோமன்றோ? இன்று காலை சிறை விடுபட்டவன் இரவிபட்டதும் கன்னக்கோல் கைக்கொண்டு களவாடப்போகிறான். கட்குடியாற் பலவித துன்பங்களை நேற்றிரா வடைந்தோன் காலையிலெழுந்து சென்று கடையைத் தட்டுகிறான். இத்தகையோரை என்னென்றியம்புவது?

"மிக வெறிக்கக்குடித்துத் தலைகால் தெரியாமல் தெருவூடே தட்டித் தடுமாறி போய்க்கொண்டிருந்தவனொருவன், அந்தோ! தலைகீழாகக் குப்புறவிழுந்துவிட்டான். முழங்காற் சில்லுபெயர்ந்துவிட்டது. நெற்றியில் நல்ல காயம். பற்களுடைந்து இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தோடுகிறது. மூச்சுப் பேச்சின்றி மூர்ச்சித்துக்கிடக்கிறான் ஏழை மனிதன். இவனைப்போல மூடனும் உலகிலிருப்பனோ வென்றியாவரும் பரிகசித்துக்கொண்டே போகிறார்கள். ஒருவன் மாத்திரம் அவனருகில் நெடுநேரமாய் உட்கார்ந்திருக்கிறான். அதைக்கண்ட வேறொருவன் அவனை நோக்கி, 'ஏனய்யா! உனக்கென்ன பைத்தியமா! அவன்தான் குடித்துவிட்டுக் கண்டார் நகைக்க விழுந்து கிடக்கிறானே. நீயேன் அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்' என்றான். அதற்கு அம்மனிதன், 'சும்மா இரண்ணே! இவன் சாப்பிட்ட சரக்கு நல்ல சரக்கண்ணே. எந்தக் கடைச் சரக்கோ தெரியவில்லை. அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமாகையால் இவனுக்குப் போதை நீங்குமட்டும் இங்கே யிருப்பேன்' என்றான்" என ஓர் கதையுமுண்டு.

ஆதலின், மேன்மக்கள் கேடு நேரிடுவதானால் முன்னதாகவறிந்து அதைத் தடுக்க முயல்வர். கீழ்மக்களோ கேடு நேரிட்டபோதும் அதை நீக்க ஒரு முயற்சியுமின்றி யிருப்பரென்பது இப்பாடலின் நீதியாகும். இக்கருத்தையே குமரகுருபர சுவாமிகளும்

> கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்
> குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
> தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண்துயில்வ
> பேரா பெருமூச் செறிந்து.

என்னுஞ் செய்யுளால் விளக்கியுள்ளார்.

> (26) நெடும்பல் மால்வரை தூர்த்து நெருக்கவும்
> துடும்பல் வேலை துளங்கிய தில்லையால்
> இடும்பை யெத்தனை யும்படுத் தெய்தினும்
> குடும்பந் தாங்குங் குடிப்பிறந் தாரினே. (ஷை-53)

(இ-ள்.) "வானர வீரர்கள் அலைகடலிலணைகட்டப் பல பெரிய மலைகளையிட்டுத் தூர்த்து நெருக்கியகாலத்தும், அக் கடலானது, மிக்க வறுமையுற்றுழியும் குடும்ப பாரத்தைத் தாங்கும் நற்குடியிற் பிறந்தாரைப்போலச் சிறிதும் கலக்கமடையாமலிருந்தது" என்பதாம்.

இதனால், உயர்குடியிற் பிறந்து உத்தம குணங்களை யுடைய பெரியோர் வறுமையுற்றுத் துன்ப சாகரத்து வீழினும் அதனைப் பொருட்படுத்தாது தங்கள் அறிவைப் புணையாகவும் பொறையைத் துடுப்பாகவுங் கொண்டு கடப்பர். "துன்பமாவது ஒரு கோட்பாடே" யென்றும், "அது மாறுபாடாகக் கொண்டால் நீங்கும்" என்றும், "வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா—னுள்ளத்தினுள்ளக் கெடும்" என்னுங் குறளினுரையிற்

கூறுகின்றார் ஆசிரியர் பரிமேலழகர். துன்பத்தைத் துன்பமாக் கருது வோர்க்கே துன்பம் துன்பம் பயக்கும்; அறிவென்னும் வாள்கொண் டெதிர்ப்போரை யஞ்சியகலும். உப்பிலாக் கூழெனினும், குப்பைக்கு முதவாக்கந்தை யெனினும் மனங்கோணுது உண்டுடுத்துத் திருப்தி யோடிருப்பவனை வறுமை என் செயவல்லது? புலன்களின் வழி செல்ல விடாமல் மனதை யடக்குவோன் இன்மையாலின்னலடைவதில்லை. மிக்க ஆசை மிக்கதரித்திரம். ஆசையற்றோனைக் காணின் ஐங்காதமோடும் மிடி. இது நோக்கியே,

"இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்" (திருக்குறள்)
"நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்" (திரிகடுகம்)

எனக் கூறின ரான்றோர்.

இங்ஙனமின்றிச் சிலரிம் மிடியின் காரணமாகப் பல தீய காரியங்க ளியற்றிப் பொருள்தேட முயல்வதும், இரந்துண் டுழல்வதும், துறவிகளா வதுமுண்டு. இவைகளியாவும் வெறுக்கத்தக்க செயல்களே. ஆராயு மிடத்து, "செல்வ வாழ்க்கையினும் வறிய வாழ்க்கையே அடக்கம், பக்தி, இரக்கம் முதலிய நற்குணங்களைத் தருதலால் * சிறந்தது" என்ப தான்றோர் கொள்கை. "இன்னல் தரும்பொருள்," "சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்" என்று ஆன்றோரருளியுள்ளார். ஆகையால், எவ்வளவு வறுமையுறினும் பொறுமைமேற்கொண்டு சகித்து நன்னெறியின் வழாது உள்ளதைக்கொண்டு உவப்புடன் இல்லறத்தை நடத்துதல் வேண்டும் என்பது விளங்குகின்றது.

(27) பெருமையும் வன்மை தானும் பேரெழி லாண்மை தானும்
ஒருமையி னுணர நோக்கிற் பொறையினை தூற்ற மன்றே
அருமையு மடர்ந்து நின்ற பழியையு மயர்ந்தாய் போல
இருமையுங் கெடுத்தா யன்றே யென்னினைந் தென்செய் தாய்நீ
(மகுடபங்கம்-31.)

அணையின் மூலமாய் முந்நீர் கடந்து முச்சிகரத்தை யடைந்த மூவா முதல்வனாகிய தாசரதியைத் தசக்ரீவன் உத்தரகோபுரத்தினின்று நோக் குங்காலவனைக்கண்ட சுக்ரீவன் கடுஞ்சினமூள அண்டையினின்ற அரவ ணைப் பள்ளியினறிதுயிலமரும் அமலனுமறியாவாறு அநிலனு மச்சுறப் பாய்ந்தேகி அவ்வரக்கனுடன் மற்போருஞற்றி யவன் முடிமணிகளைப் பறித்துவந்து சுவாமியின் திருமுன்வைத்துப் பணிதலும்,அன்னு னகன்ற மைக் காற்றுது. "ஐயகோ! சுக்கிரீவனுக்கு யாது தீமை நேரிடுமோ?" வெனத் துயர்கொண்டிருந்த ஜானகி காந்தன் அவன் வந்ததைக் கண்ட வளவில் களிப்புக்கொண்டு அவனைப் பார்த்துக் கூறும் சந்தர்ப்பத்துள்ள விச்செய்யுளின் பொருள்; "சுக்ரீவா! நன்றாக ஆலோசித்துப் பார்க்கு

---

* இவ்விஷயமாகப் பின்னர் விரிவாக வரைவாம்.

மிடத்து ஒருவனுக்குண்டாம் பெருமை வண்மை மிக்க வழகு ஆண்மை யென்னுமிவைகள் பொறுமையையன்றோ பற்றுக்கோடாகக் கொண்டுள் ளன. அஃதின்றேல் பெருமை வண்மை அழகு ஆண்மை முதலானவை உண்டாங்கொல்லோ? அங்ஙனமாக நீ செய்யத்தகாததையும் அதைச் செய்வதனு லெனக்குண்டாம் பழியையும் மறந்து இகபரமிரண்டையுங் கெடுக்கும்படியாய் என்ன நினைந் தென்ன செய்தாயப்பா!'' என்று கூறி னர் என்பதாம்.

இப்பாவால், "பொறுமை கடலினும் பெரிது" "பொறுமை யுடை யார் பெருமையடைவார்; சிறுமையடையார்" "சாந்தம் பலஹீனமன்று." எத்துணை அவசரகாரியமேனும் வெற்றிபெற வெண்ணின் பொறுமை யைக் கைவிடலாகாது. "அவசரகாரியம் ஆபத்துக்கிடம்." பொறுமை யின்மை கூரிய அறிவையுங் குறைக்கும். "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு." பொறுமையாற் கார்யசித்தி பெறுதா ரியர்ண்டுமிலர். "பொறுத் தவர் பூமியாள்வர் பொங்கினவர் காடாள்வர்" என்ப தனுபவமுதுமொழி. பொறுமையே பெருமை ஆண்மையாதியவற்றை யளிக்குங் கற்பதரு. ஆக லின் ஒவ்வொருவரும் பொறுமையையே சிறந்த பூஷணமாக் கோடல் வேண்டுமென்பது பெறப்படுகின்றது.

(28) மாற்ற ருந்தட மணிமுடி யிழந்தவா ளரக்கன்
ஏற்ற மெவ்வுல கத்தினு முயர்ந்துளா னென்னினும்
ஆற்ற னன்னெடுங் கவிஞரோ ரங்கத முரைப்பப்
போற்ற நம்புக ழிழந்தபே ரோநவனும் போன்றன்
(முதற்போர்-249.)

இராகவருக்கு மிராவணனுக்கும் நடந்த முதனுட்போரில் கண்டகனு கிய தசகண்டன் சகல படைகளையு மிழந்து ஞாயிறு போன்றொளிரும் மணிகளிழைத்த மகுடங்களையு மிழந்தவனுய்த் தனித்துத் தரையை நோக் கியவண்ணமாக நின்ற காட்சியைக் கூறுமிடத்துள்ளதுகவிக்கூற்றாகிய விச செய்யுள், "நீக்கமுடியாத பருத்த மணிகளிழைத்த கிரீடங்களை யிழந்து வெறுந்தலையனுய் நின்ற விலங்கேசன், இவ்வுலகத்தாரினுஞ் செல்வத்தி னும் பராக்ரமத்தினும் மிகுந்துள்ளவனுயினும், கலைவன்மையுடைய கவி ஞருக் கபசாரஞ் செய்தோன் அப்புலவர் மனநொந்து கூறும் தூஷணங்க ளாற் றன் கீர்த்தி செல்வம் முதலியவற்றை யிழப்பதுபோல, எல்லா மிழந்தவனுய் நின்றான்'' என்னும் பொருட்டாம்.

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமி ழோர்க் கொவ் வான்."

"மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்."

என்னும், இன்னோரன்ன செய்யுட்களாற் கவிஞர் பிரமனினும் அரசரினும் சிறந்தவரென்பது இனிது விளங்குகின்றது. ஆகலின் அப்புலவர் மாட்டி யாவரும் அன்புடன் வழிபாடுடையராதல் வேண்டும். "கற்றலிற் கற்

ரோரை வழிபடுதல் சிறந்தன்று." அவர்க்குத் தீமை புரிவோர் அழிந் தொழிவர். "வில்லேருழவர் பகைகொளினுங் கொள்ளற்க, சொல்லே ருழவர் பகை" என்றார் வள்ளுவரும். காளமேகப் புலவரை யவமதித்த திருமலைராயன் நகரம் நாசமுற்றது. * நந்திகலம்பகத்தால் மாண்டகதை நாடறியும். கச்சிப்பதியில் வசித்துவந்த பக்திஸாரர் அந்நகரை யாண்டு வந்த பல்லவராயனாற் சினமூட்டப்பெற்றுப் புறம்போகையில் திருமாலை நோக்கி, "எம்பெருமானே! செந்நாப்புலவனாகிய யான் இந்நகர் விட்டேக நீர்மாத்திர மீண்டு வதிவீரோ? என்னுடன் புறப்படும்" என்னுங் கருத் தோடு

> கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
> மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
> செந்நாப் புலவனியான் செல்கின்றேன் நீயுமுன்
> பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்

என்னும் பாடலைப் பாடலும், பக்தபராதீனன் அங்ஙனமே சென்றனர். குலோத்துங்கசோழன் கம்பரை யவமதித்தால் சிறுமை யுற்றனன். † பொய்யாமொழிப் புலவரை யுபசரியா தொழிந்ததினிமித்தம், ஓர் தாசி கண்ணிழக்கப்பெற்றாள். இன்னு மெண்ணிலாக் கதைகளுளவேனும் விரி வஞ்சிவிடப்பட்டன.

இக்கவியால் புலவர் மேன்மையும், அவரை வழிபடுவோர் நன்மையும் இகழ்வோர் தீமையு மடைவாராகலின், அன்னோர்மாட்டு அபசாரப்படா மல் உபசரித்துப் போற்றவேண்டு மென்பதும் விளங்குகின்றது.

(தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

யாஸீன்.

ஜீவன் செல்லும்வகை மூன்றின் விளக்கம்.

சர்வமத சன்மார்க்க நேயர்களே!

1-வது. ஜீவன் சத்துவகுணத்தோடுகூடி சுத்த அறிவையே முன் னிட்டு என்றென்றும் நித்தியமான சச்சிதானந்த ஸ்வரூபப் பிரமத்தின் பாலடைவதேயாம். இவ்வழியாலொருவன் சென்றிடி லவனுக்கு வேண்டு மான சிற்சில உபகரணங்களை சமைப்பித்தல் வேண்டும். அவையாவன:—

1. நானெனு மகங்காரத்தைக் கெடுத்தல்.
2. எமக்குடைய தென்ற மமதையைக் கொல்லல்.
3. உயிர் வதை மறுத்தல்.

---

* இக்கதை மற்றொருபக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.
† இக்கதை பின்னால் எழுதப்படும்.

4. மதபேத வகுப்பை விடல்.
5. மதவொழுக்க நெறிகளை யிகழாதிருத்தல்.
6. சர்வ ஜீவராசிகளிடத்து மிரக்க முறல்.
7. சமரசக் கொள்கையை வளர்ப்பித்தல்.
8. எஞ்ஞான்றும் பொய்யை நீத்தல்.
9. காமவிகாரத்தைக் களைதல்.
10. தன் புத்தியை மயக்கும் லாகிரி வஸ்துவை நீக்கல்.
11. உள்ளது போதுமென திருப்தியடைதல்.
12. விஷய நாட்டமனதை யடக்குதல்.
13. ஒன்றைக்கொண்டே நிலை பெறல்.
14. நற் சாதுசங்கங்கப் பழக்கமுறல்.
15. பிரபலசுருதி ஞானசாஸ்திர சிரவண சாதனை செய்தல்.

இவ்வித விதிகளை விடாது முயர்ச்சித்தவர்கள், மூன்று தடைகணீங்கி சத்துவகுணப் பிரதிபிம்ப சுத்தத் தெளிவான ஞான விருத்தி யெனும் பானம் புகட்டப்பெற்று, அவ்விருத்தியாற் றிருசியத்தைமறந்து இருவினை யுமற்றுத் தன்னையன்றி இரண்டாவது வஸ்து இல்லாமையான விமலபோத சொரூபமாயிருப்பர். வேதமொழி (பீமக் அதிசித்கின் இந்த மலீக்கின் மும்ததிறு) யெனுமொழியை யுணருக. ஒரு சமயாசமயம் அந்த ஸ்வரூபப் பிரமானந்த வெள்ளந் தடையறப்பாயும்போது நானே பிரமமெனச் சொல்வர். அது சமயம் அம்மொழி பிரமத்தையன்றி வேறிலை. வேதமொழி (இன்னனீ அனல்லாஹு லாயிலாஹ இல்லா அனு) வெனும் வாக்கியத்தை யுணரவேண்டும். இந்த இடத்திலுண்டாகும் பிரமானந்த சுகத்தைப் பெற்றப் பிரமஞானிகளறிவார்களே யன்றி யேனையோ ரறியார்கள். இதைப் பற்றி யோர்மஹான் கூறுகின்றதாவது. (நானற்ற போதத்தை நானுன முத்தியை நானெங்கனஞ் சொல்வன் உந்தீபர — நான்மறைக்கு மெட்டாதென் றுந்தீபர) திருமந்திரம்.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கா
ளகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்த
மகட்குத் தாய்தன் மணாள னோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்கனே.

இம்மொழியை யுணருக. இன்னும், இவர்கள் எங்கெங்கே நோக்கினு மாங்காங்கே பிரமஸ்வரூப மாகவே காணுவர். வேதமொழி (பஜனமர்த — துவல்லூபதம்மவஜ்ஹுல்லாஹி) இம்மொழியை யுணருக. இன்னொரு மஹானுங் குணங்குடி சுவாமிகளுங் கூறுகின்றதாவது (பார்க்குமிடமெல்லாம் பூரணங்காணம்மானே — பாராமலல்லோ பாழ்பட்டேன்காணம்மானே — என்றும் பார்க்குமிடந்தோரும் பரிபூரணங் கண்டேனே — நோக்குமிடந்தோரும் நல்லநூரினிற் சென்றேனே) என்ற இம் மொழிகளையு முணருக — இதை ஜீவன் முத்தியென்றும், நிர்க்குணப் பிரமவுபாசனை யென்றுஞ் சொல்வர்.

2-வது. ஜீவன் ரசோகுணத்தோடு கூடி அறிவறியாமையை முன்னிட்டு ஆண்டானடிமை யெனப் பேதம் வகுத்துப் பரோக்ஷபாவனையாலக்கடவுளுக்குச் சீவன் — அறிவு — நாட்டம்—தத்துவம் — பார்வை — கேள்வி—வார்த்தை—இக்குணங்களுளதாகக் கற்பித்து அவராலருளப்பட்ட கன்மகாண்டம் பக்திகாண்டவிதிகளை யனுசரித்து—வழிப்படல்—விரதம் வைத்தல் — தருமஞ் செய்தல் — மகாஸ்தலயாத்திரை முதலான புண்ணியங்களைச் செய்து காமிய கன்மத்தால் சுவர்க்காதி போகங்களை யடைந்து சிற்சிலகாலஞ் சுகமாய் வசிப்பானெனப் புலப்படுகின்றது. வேதமொழி (ஒமா அத்ளுக்கமாயில்லியூன்) இம்மொழியை யுணர்க. இதைச் சகுண உபாசனை யென்றுஞ் சொல்வர்.

3-வது. ஜீவன் தாமதகுணத்தோடுகூடி அறியாமையெனு மூடத்தை முன்னிட்டுக் கண்டது காட்சி கொண்டது கோலம், பெண்டுபிள்ளைகளே சுகமெனக்கருதி — புண்ணியம் — பாபம் — ஞாயம் — அபத்தம் — நீதி — அநீதி — நியாயம் — அனியாயம் — இவைகளொதையுங் கவனியாமல் எவரையாகிலுங் குடியைக் கெடுத்துப் பொருட் சம்பாத்தியஞ் செய்து சேர்த்துவைக்கு நோக்கமே யதிகரித்துப் பஞ்சேந்திரிய வழியாய் மனதை விடையத்தி லழுந்தச்செய்து, அந்த மயக்கத்தாற் றன்னையுந் தனக்காதாரமான தலைவனையுமறிந்து கடவுளுக்கு வழிப்படாமலும், தோத்திரஞ் செய்யாமலும், அவரின் நற்குணங்களை நினைத்ததின்பாலடையாமலும் தற்போத மகங்கார மேலிட்டு இத்தூல தேகத்தை நானென்றும் மற்ற இதர வஸ்துக்களை யெனதென்றும் பாவித்து, சர்வஜீவராசிகளையுந் தன்னைப்போ லெண்ணுமல் வேறெனக் கருதித் — துவேஷப்பார்வையாற் றீமைசெய்து நிடேத கன்மத்தான் நரகாதி போகங்களை யடைந்து சிற்சிலகாலந் துக்கத்தில் வசிப்பானெனப் ·லப்படுகின்றது. வேதமொழி (ஒமா அத்தளுக்க ம வீஜ்ஜீன்) இம்மொழி◌ய யுணர்க. இதை மூட உபாசனை யென்று சொல்வர். இவர்களுக்கும் மிருகங்களுக்கும் யாதொரு பேதங்கிடையாது. இவர்களுந் தின்பர் — குடிப்பர் — போகிப்பர்—சயனிப்பர் — அவைகளுமவ்விதமே இருக்கின்றன—ஆனாற் கோலத்தான்மட்டும் வேறுபடுகின்றன; குணத்தாலுஞ் செய்கையாலும் ஒன்றுபடுகின்றன. வேதமொழி (இன்ஹும் இல்லாகல் அன்ஹாம்பல்ஹும் அழல்லுசபீலா) இம்மொழியை யுணருக. இன்னுமிவர்களின் காது வெடிக்கும்படியா யுரத்த சத்தத்துடன் நற்போதனைகளை யெடுத்துக் கொட்டிய போதிலும் கொஞ்சமேனுஞ் செவிக்கேறாது; மனதிற்படியாது. அவைகள் ஈயத்தை யுருக்கிச் செவியினில் வார்த்தா லெப்படியோ வப்படியே கண்டு வெறுப்படைவார்கள். வேதமொழி (கதமல்லாஹு அலா குலூபிஹிம் ஒ அலாஸம்யிஹிம்) இம்மொழியை யுணருக.

ஆனால் மேலெழுதிய மூன்றினின்றுஞ் சத்வகுண ஞானவழியன்றி மற்ற இரண்டு தானத்தாற்றோனும் இன்பமானது, பூவை நுகரும் வண்டினின்பம்போலும் மலத்தை நுகரும் வண்டினின்பம்போலுந் தோன்று

கின்றன. அவையாவன—இயாவரு மூகக்கும்படியாயுள்ள மலரின் வாசத்தை நுகரும்வண்டினின்பம்போற் சுவனத்தினின்பமும்,இயாவருங்களையும்படியாயுள்ள ஆபாச மலத்தை யுண்ணும் வண்டினின்பம்போன் னரகினின்பமுமாகும். இவ்விரண்டு மொருவனிடத்தினிலைப்பதில்லை. அவரவர்களின் நன்மைதீமைக்குரிய காலங்கணிக்கப்பெற்று அக்காலவரை சுகதுக்க மனுபவித்துத் தானம்விட்டுத் தானம்பேர்ந்து சகடக்காற்போலெண்ணிறந்த சென்மங்களிற் சுற்றிக்கொண்டே இருப்பர். வேதமொழி (வகத் கலக்கும் அத்வாளு) இம்மொழியையுமுணருக. இவ்விரண்டின்றூனத்தினின்பங்களை அனுபவிக்கத் தனுகரணம் வேண்டும். இந்தத் தனுகரணங்களுக்குக் காரணம் நன்மை தீமையென்றும், இந்த நன்மை தீமைக்குக் காரணம் இருவினையென்றும், இந்த இருவினையாலேற்படும் திரேக சம்பந்தத்தினுற் சுகதுக்கமென்றுமுணர்ந்து, அவ்விரண்டுஞ் ஜனனத்தைக் கொண்டிருப்பதாலவற்றை நீக்கி யென்றென்றும் பிறப்பற்றிருப்பதே பேரானந்த சுகமெனக்கருதி குணங்குடி மௌனதேசிக சுவாமிகள் கூறுகின்றனர். (கனக்கு மிருவினையாங் காவடியைத் தூக்குதற்-கெனக்கு முடியாதினிமேலெந்தாய் நிராமயமே) யென்றும். தாயுமான சுவாமிகள் (என்னைக்கெடுக்க விசைந்த விருவினை நோய் — தன்னைக்கெடுக்கத் தகாதோபராபரமே) யென்றும் கோடை அபூசாலிஹ் நாயகம் (சுமை போதும்போது மினிச் சுழிமாயைப் பூதலத்தி—லமைப் பாக்கிடா திறையே யாழ்வதினி யெக்காலம்.) இம்மொழிகளெல்லாம் முணருக. இந்த இருவினைக்குங் காரணம் இச்சையென்றும், இந்த விச்சைக்குக் காரணம் பூர்வவாசனையென்றும், இந்த வாசனை சகித இசசாசக்தியே பிறப்புக்கு வித்தாயிருக்கிறதென்றுந்தெரிகிறது. திருக்குறள் "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுர் தவாவப் பிறப்பீனும் வித்து". இந்த வாசனை சகித விச்சாசக்தி என்பது, ஒவ்வொருவர் இருதயத்திலுலக விஷயமாயுண்டாகுமிச்சை யென்ற அவாவைத் தவிர வேறில்லை. இதை மட்டிட்டு எவராலுஞ் சொல்லவியலாது. தாயுமான சுவாமிகள் (ஆசைக்கோரளவில்லை அகிலமெல்லாங்கட்டி யாளினுங் கடன் மீதிலாணை செலவே நினைவர்...) இம்மொழியாலறிக. இன்னும் ஜீவன் முத்தியடையாவண்ணம் தடைகொள்ளுங் காரணம் இச்சையாயிருப்பதாலும் தூலமிழந்த பின் வேறு தூலம் அமையப்பெறும் விதை அவாவா இருப்பதாலும், இந்த அவாவைக் கண்டனஞ்செய்த லொவ்வொருவர்க்கும் முக்கிய கடமையாம். வேதமொழி (வக்திலூ அன்புஸகும்) இவ்வாக்கியத்தை யுணருக. இன்னும் திருமந்திரம்.

ஆசை யறுமின்க ளாசை யறுமின்க
ளீசனோ டாயினு மாசை யறுமின்க
ளாசைப் படப்பட வாய்வருந் துன்பங்க
ளாசை விடவிட வானந்த மாமே

யெனவருவதைக் காண்க. அவாவை நீக்கும் பொருட்டே வேதமும்

சாஸ்திரமும், முன் மேதாவிகளி நூற்களும் முறையிடுகின்றன—ஜென் மத்துக்குக் காரணம் அவாவாயிருப்பதால் அவாவெனும் விருட்சத்தை வேரறப்பிடிங்கிக் களைதல் அவசியமேயாம். திருமந்திரம்.

இக்காய நீங்கி யினியொரு காயத்திற்
புக்கிப் பிறவாமற் போம்வழி தேடுமி
னெக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன வருட்பெற லாமே.

இந்த விச்சையானது விஷயத்தைக் கருதி பஞ்சேந்திரிய வழியாயெங் கெங்கு செல்லுமோ அங்கங்கெல்லா மதையே முன்னிட்டு யாம் பின் துடருகின்றமையா லவ்வாசையை நீங்கள் நாயகனுக்கிக் கொள்கின்றீர்க ளென்று ஆண்டவனின் வேதமொழி கூறுகிறது. (அற ஐத்தமனித் தகத இலாஹஹ ஹவாஹ). இந்த இச்சைக்குக் காரணம் மனோ விருத்திசகித வந்தக்கரணமு மாயையுமன்றி வேறில்லை. இந்த மாயை யோ, ஆகாயத்தினிடத்து நீலவருணங் கற்பித்தாப்போல் வெறுந் தோற் றமாய்த் தோன்றுகின்றது. இதைப்பற்றி திருமந்திரம்,

மனமாயை மாயை யிம்மாயை மயக்க
மனமாயை தான்மாயு மற்றொன்று மில்லை
யினமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டாம்
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே

இந்த மாயையானது யாரிடத்தில்லாமற்போனதோ அவர்கள்தான் சீவன் முத்தியடைந்த பூரண ஞானிகளாம் ஆண்பிள்ளை சிங்கங்களாகும். இவர் களுக்குப் பிறப்பில்லை, இறப்பில்லை, மாறுபிமானமில்லை, மாசில்லை, மறு வில்லை, குலமில்லை, கோத்திரமில்லை, குணங்களில்லை, நலமில்லை, நாட்டமில்லை, தேட்டமில்லை, இவர்களையன்றி மற்றயேனையோர்கள் வீண்பிள்ளை, வெறும்பிள்ளை, டம்பார்த்தபிள்ளை, தொந்திபீறத்தின் னும் பிள்ளை, ஸ்திரீசுக பூரணப்பிள்ளை, மூப்புப்பிணியொடு சஞ்சலப் பிள்ளை, சம்சார பந்தங்கட்கும் பிள்ளை, இகபரமாய்ச் சுழலும்பிள்ளை, ஜனன மரணப்பிள்ளை, சுடுகா டுகா டுறையும்பிள்ளை, லோகாந்திரஞ் செல்லும்பிள்ளை, அந்தகாரமூடி ஞானக்கண்ணற்ற பிள்ளை, பாசவலை சிக்கி மோகத்தாலழியும் பிள்ளை, ஒப்பற்ற வொருமொழி ஞானக்கண் ணறிந்து வணங்காப்பிள்ளை, யோனியளற் பெருங்கேணி வீழ்ந்தழுந்தும் பிள்ளை, ஒரு நான்குபேர் சுமக்கப் பீற்றற்றுருத்தியைப் பக்குவமாய் வளர் த்தபிள்ளை. இவ்விதவீனங்கட் பொருந்திய போலிப்பிள்ளைகளாகாமல் சுத்த சைதன்யக் கடவுளின் ஸ்பரூபப் பிள்ளைகளாகுவதற்கே சர்வ ஜீவா த்துமாக்களும் முயற்சிக்கவேண்டும். இதையின்றி வீண்காலம் போக்காது சகல மத வகுப்பை யனுசரித்த யெனதன்பார்ந்த சகோதரர்காள்! உங்கட் டிருவடி யெனது சிரமேற் கொண்டு வந்தனஞ் செய்கின்றேன். இதனை வாசித்துணரும்போது மதபேதகக் குப்பைக்கிடங்கில் வீழ்ந்து மயக்க வாதஞ் செய்ய வுன்னு மஞ்ஞானக்கண்ணை வேரறக்களைந்து சுத்த

விவேகஞான விருத்திக் கண்ணுற் சமரசமாய்ப் பார்த்து இதிலுள்ள உண்மையைமட்டுங் கிருகித்து அவ்வுண்மையான அத்துவைத சன்மார்க்கப் பூவாரத்தை இயாவருமணிந்து பசுவாகிய ஜீவனிடத்துறும் மலங்களை வைராக்கியமெனும் ஞானவிருத்தி யக்கினியாலெரித்து அப்பால் எஞ்சி நிற்கும் ஐஸ்வரிய சச்சிதானந்த அதீதமயமாயிருக்க சர்வவல்லமையுள்ள கடவுள் தனை வணங்குகின்றேன்.

K. K. செய்கு அப்துல் காதிர்,
மேலப்பாளையம்.

சந்நியாசம்—சந்நியாசிபேதம்.

(30-ம் பக்கத் தொடர்ச்சி.)

சந்நியாசிகள் குடீசகன், பகூதகன், ஹம்ஸன், பரமஹம்ஸன் என்று நான்குவிதமாகக் கூறப்படுவார்கள். இந்தப் பேதம் அவர்களுடைய சத்தினி பாத விசேஷத்தாலும் கர்மானுஷ்டான ஒழுக்கங்களாலும் பகுக்கப்பட்டது. இந்நால்வர்களுள் இறுதியிற் கூறப்பட்ட பரமஹம்ஸன் உத்தமன். ஏனைய மூவரும் முறையே ஒருவருக்கொருவர் தாழ்ந்தவராவார். குடீசகன் பரிபாக முதிர்ச்சியால் பகூதக, ஹம்ஸ, பரமஹம்ஸ ஆச்சிரமங்களைப் பெறலாம். இவர்களுள் குடீசகன் சந்நியாசிகளின் முறையை நடத்தச் சக்தியற்றவனாகையால் தன் பந்துக்கள் கிருகத்தில் பிக்ஷை யெடுத்து ஜேஷ்டன் புத்திரன் வைத்துண்ணலாம். ஆயினும் குடும்ப வியாபாரத்தை முற்றிலும் ஒழித்துவிடவேண்டும். பிறருடைய கிருகங்களிலும் பிக்ஷையெடுக்கலாம். சிகை யக்ஞோபவீதம், திரிதண்டம், கமண்டலம் இவைகளைத் தரிக்கவேண்டும். சாவித்திரி மஹாமந்திரத்தை நூறு அல்லது ஆயிரம் அல்லது கணக்கில்லாமல் ஜபித்துவரவேண்டும். பசுவின் கரியரோமத்தால் காலங்குலம் கட்டப்பட்டதும் சமனான கணுக்களையுடையதுமான மூன்று வேணு தண்டங்களையும் தரிக்கவேண்டும். பாத்திரம் வைப்பதற்கோர் உறி, கமண்டலம் ஆசனம் இவைகளை மரத்தினுற் செய்துவைத்திருக்கவேண்டும். ஸ்நானம் தவறாமல் செய்யவேண்டும். தேவாராதனை, தேவதர்ப்பணம், சூரியநமஸ்காரம் செய்துவரவேண்டும். கீழ்த்திசையை நோக்கி உட்கார்ந்து பிராணாயாமஞ் செய்துவரவேண்டும். தன் சக்திக்குத் தக்கபடி காயத்திரி ஜபம் செய்துவரவேண்டும். மோக்ஷ சிந்தனை யுடையவனா யிருக்கவேண்டும். தன் சரீரதாரணத்துக்கேற்ற பிக்ஷையை எடுத்துவரவேண்டும். ஜபம், இதிகாச புராண ஆராய்ச்சிகளால் பகல் பொழுதைக் கழிக்கவேண்டும். சந்தியோபாசனையைக் கிரமமாய்ச் செய்யவேண்டும். தேவாலய முதலிய பரிசுத்த ஸ்தலங்களில் இராப்பொழுதைக் கழிக்கவேண்டும். சாந்தி, பொறுமை, தனித்திருப்பது, பவித்திரதாரணம், இவைகளை விடாதவனாயிருக்கவேண்டும். ஒருவன் வீட்டில் எப்பொழுதும் புசிப்பது

கூடாது. காமக்குரோதங்களை விட்டொழித்து ஸ்ரீ பரமேசுவரனைச் சதா தியானிக்கவேண்டும். திரிதண்டம் கிடையாவிடில் ஒரு வேணுதண்டத்தைத் தரிக்கவேண்டும். வேணுதண்டம் தவறிப்போனால் புரசு, அல்லது வில்வதண்டம் இவற்றில் ஒன்றைத் திரிதண்டம் கிடைக்கும் வரையில் தரிக்கவேண்டும். சிலர் சிகையுடையவர்களாயும் சிலர் முண்டகர்களாயும் இருந்து வருவார்கள்.

இனி திரிதண்டமென்பது வாக்தண்டம், மனோதண்டம், கர்மதண்டம் என்பனவா மென்று மனு கூறினார். இம்மூன்று தண்டங்களையும் விடாமல் தரித்து வருபவன் திரிதண்டியாவான் என்பது மநுவின் கருத்து. வாக்தண்டமென்பது மௌனமாம். கர்மதண்டமென்பது ஒன்றிலும் பற்றுதலில்லாம லிருப்பதாம். மனோ தண்டமென்பது பிராணாயாமமாம் என்று தக்ஷர் அவற்றின் பொருளை விரித்துக் கூறினார். வேறு தண்டம் முதலியவைகள் ஆச்சிரமத்துக்கு அடையாளமாக இருப்பனவேயன்றி மோட்சத்தை யளிக்கமாட்டா. மனோதண்டம், கர்மதண்டம், வாக்தண்டம் முதலியவைகளே மோட்சகாரணமா யிருப்பனவாம். ஆதலால் சன்னியாசியானவன் இந்த மூன்று தண்டங்களை அவசியமாய்த் தரிக்கவேண்டும். பஞ்சேந்திரியங்களையும் மடக்கிக் கோபம் முதலிய துர்க்குணங்களை யொழித்துத் தத்துவ ஞானத்தை யுணர்ந்த பெரியோர்கள் வாக்தண்டமாதி திரிதண்டத்தையே தரித்து வருவார்கள். குடீசகன் பகூதகன் இருவரும் பரிபாக முதிர்ந்தால் ஹம்ஸ பரம ஹம்ஸ முறைமையைக் கைக்கொள்ளலாம். அப்போது கமண்டலம் சிகை ஜலபாத்திரம் தண்டம் யக்ஞோபவீதம் இவைகளை யெல்லாம் "பூஸ்வாஹா" என்ற மந்திரத்தை யோதி நீரில் எறிந்துவிட்டு ஆன்மதியானத்தி லிருப்பார்கள். ஸர்வஸங்கப் பரித்தியாகம் செய்து பிரமதியானத்தி லிருக்கவேண்டும்.

பகூதகன்.

சகல சங்கங்களையு மொழித்துப் பந்துக்கள் வீட்டில் பிக்ஷை யெடாமலும் ஒருவனுடைய சோற்றைப் புஜியாமலு மிருக்கவேண்டும். தன் பூமியில் படுக்கக்கூடாது. சற்றும் மனதிற் களங்கமின்றி யிருக்கவேண்டும். கண்ட விடங்களுக்கெல்லாம்போய் அலைந்து திரிவதாகாது. மோட்சமார்க்கத்தை விட்டு விலகக்கூடாது. ஆடை உணவு படுக்கை ஆசனம் முதலியவைகளில் ஆசை வைக்கக்கூடாது. ஏழு கிரகங்களில் பிக்ஷை யெடுக்கவேண்டும். பசுவின்வால் மயிரினால் திரித்த கயிறு, திரிதண்டம், உறி, ஜலபாத்திரம், பவித்திரம், மண்வெட்டி, கத்தி, சிகை, யக்ஞோபவீதம் இவைகளையுடையவனா யிருக்கவேண்டும். தேவதாராதனம் செய்து வரவேண்டும். இதுவே பகூதக சன்னியாசியின் இலட்சணமாம்.

ஹம்ஸன்.

இவன் மோட்ச தருமத்தில் மிகச் சிரத்தையுள்ளவனா யிருக்கவேண்டும். ஆதலால் திரிகாலமும் ஸ்நானம் செய்யவேண்டும். ஈரமான வஸ்

திரந்தரித்தல், சாந்திராயணாதி விரதங்கள் இவைகளை அனுஷ்டித்து வர வேண்டும். மரத்தினடி, குகை, நதிக்கரை இவைகளிலெதிலாவது வசித்து வரவேண்டும். ஒருவருடைய கிருகத்தில் வாசம் செய்யலாகாது. கமண்டலம், உறி, பிக்ஷாபாத்திரம், கந்தை, கௌபீனம், அரைக்குடுத்தும் வஸ்திரம் இவைகளைத் தரித்திருக்கவேண்டும். ஒரு மூங்கில் தண்டத்தைத் தினந்தோறுந் தவறாமல் தரித்திருக்கவேண்டும். கிராமம் தீர்த்தம் இவ்விடங்களில் ஒருநாள் வசிக்கலாம். பெரிய நகரங்களில் ஐந்துநாள் வசிக்கலாம். மாஸோபவாசம் பட்சோபவாசம் முதலிய உபவாசங்களால் சரீரத்தை ஒடுக்கிவர வேண்டும். ஆஸனம், பாதரக்ஷை, கொடை, ஜலபாத்திரம், ஔஷதம், தண்டம், கமண்டலம் இவைகளையும் தரிக்கலாம்.

பரம ஹம்சன்.

பரமஹம்ஸனுக்கு இரண்டு கௌபீனம், கந்தை, ஒரு தண்டம் இவைகளே விதிக்கப்பட்டன. இதற்குமீறி நடப்பானானால் அவன் மஹா கொடிய நரகத்தை யடைந்து அநந்தரம் திரியக்யோனியில் ஜனிப்பான். கிழிந்ததும் அழுக்கில்லாததுமான கௌபீனந்தரித்து, ஒரு கந்தையை வஸ்திரமாயுடுக்கவேண்டும். அந்தத் துணிகளைக் காவியில் தோய்க்க வேண்டும். ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை யடக்கிச் சத்துவ குணத்தை யுடையவனாய்ப் பிரணவத்தை அப்பியசித்துவரவேண்டும். சாஸ்திர சிரவணத்தில் விருப்பம் வைக்கவேண்டும். மிகச் சுத்தனாய் உலகமெல்லாம் பிரமமென்கிற பாவனை செய்துவரவேண்டும். ஆத்மதிருப்தியுடையவனா யிருக்கவேண்டும். கல்லையும் பொன்னையும் சமனாய்ப் பாவிக்கவேண்டும். தத்பதார்த்தத்துவம்பதார்த்த ஐக்கியத்தை அறிந்திருக்கவேண்டும். விசேஷமாய் ஜனங்களிடத்தில் வசித்துவரவேண்டும். சிரோமுண்டனம் செய்துகொள்ளவேண்டும். எப்பொழுது அழியாத பிரமஞான முதிக்கின்றதோ அந்த க்ஷணமே பரமஹம்ஸாச்சிரமத்தை யடைவதற்குரிய காலமாம். இவர்களுக்கு யக்ஞோபவீதம் அவசியமன்று. சிகையும் அவசியமன்று. ஞானமே சிகையும் யக்ஞோபவீதமுமாம். எல்லாவற்றையும் காண்பதே நிஷ்டையாம். ஏனென்றால் எக்காலத்தும் கெடுதியற்ற பிரமமே உத்தமமான சூத்திரமென்றும் எல்லாம் ஸச்சின்மயமென்றும் வேதமுணர்ந்த வித்தர் கூறி வருவதாலும், நூலில் மணிகளைப்போல இப்பிரமத்தினிடத்தில் எல்லாம் கோக்கப்பட்டிருப்பதாலும், இந்தப் பிரமத்தையே யோகஞான முணர்ந்தவனான பரமஹம்ஸன் சூத்திரமாகக் கொள்வான் என்று நூல்கள் கூறின. உத்தமமான யோகத்தை யுணர்ந்தவர்களுக்கு மார்பில் தரிக்கும் பூணூலால் பயனில்லை. கிரியைகளுக்கெல்லாம் சாதனமான பிரமத்தையே சூத்திரமாகத் தரிப்பதுதான் அவர்களுக்குச் சிறந்தது என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. எவன் ஞானத்தையே சிகையாகவும், பூணூலாகவும் கொண்டிருக்கிறானோ அவனிடத்தில் பிராமணியம் நிறைந்திருக்குமென்று பிரமவித்துக்கள் கூறுகின்றார்கள்.

ஆருணி என்பவர் பிரமலோகத்துக்குப்போய்ப் பிரமாவை நோக்கி, எந்த ஆச்சிரமத்தால் நான் கன்மங்களை யெல்லாம் விட்டொழித்து இருக்கக்கூடுமென்றுகேட்டார். பிரமதேவர் ஆருணீ! நீ சன்னியாசாச்சிரமத்தில் புகுந்து புத்திரன், சகோதரன், பந்துக்கள் இவர்களைவிட்டு நீங்கிச் சிகை, யக்ஞோபவீதம், யாகம், பூணூல், வேதமோதல், மேலேழு கீழேழு உலகங்களையும, பிரமதண்டத்தையும் விட்டுத் தண்டம் கௌபீனங்களைத் தரித்துக்கொள். மற்ற எல்லாவற்றையும் விட்டொழித்துவிடு என்றார். தன்னைச் சேர்ந்தவர்கள், புத்திரர், மித்திரர், சகோதரர் யக்ஞோபவீதம், சிகை, மற்றுமுள்ள கர்மங்களிவைகளை யொழித்து, உலகத்தார் வெட்கப்படாமலிருப்பதற்காகக் கௌபீனந்தரித்துச் சன்யாஸம் பெறவேண்டுமென்று பரமஹம்ஸோபநிஷத் கூறியது. ஞானத்தையே தண்டமாகக் கொண்டிருப்பவன் ஏகதண்டி யென்னப்படுவான். ஞானத்தைப் பெறுமல் இஷ்டமானதைப் புசித்துத் தண்டம் தரித்து வருகிறவன் மஹாகோரமான ரௌரவ நரகத்தில் விழுவான் என்று சாஸ்திரங் கூறுவதால், வீணில் கருமத்தை யொழித்துவிட்டுத் தண்டந்தரித்துக்கொண்டு ஞானத்தைப் பெறுமல், கிருகஸ்தர்களைத் தொந்திரவு செய்துகொண்டு காலங்கழிப்பவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள். எந்த ஆச்சிரமத்திலாவது இருந்துகொண்டு அவ்வாச்சிரமத்திற்குரிய தர்மங்களை நடத்தாவிட்டாலும், எல்லாப் பூதங்களிடத்திலும் பரப்பிரம பாவனை செய்து வருவது நல்லதே யொழியத் தண்டம் கமண்டலம் முதலியவற்றைத் தரித்துக்கொண்டு திரிவது தருமமாகாது. தேற்றான்விதை கலங்கின தண்ணீரைத் தெளியச் செய்யும் சக்தியுடையதாயினும், அதை யுரைத்துத் தண்ணீரில் போட்டால்தான் அத்தண்ணீர் தெளியும். அன்றித் தேற்றான்விதையென்று அதன் பேரைச் சொன்ன மாத்திரத்தில் கலங்கின தண்ணீர் தெளிவதில்லை. அதுபோல ஆச்சிரமத்துக்குரிய தர்மத்தை விட்டு ஒழித்து அடையாளங்களை மாத்திரம் தரித்துக்கொள்வதனாலேயே அவ்வாச்சிரமம் நிறைவேறுவதில்லை. தேற்றான்வித்தின் பேரைச் சொன்ன மாத்திரத்தில் கலங்கினநீர் தெளியாததுபோல ஆத்துமஞானப்பியாசமில்லாதவர்கள் பிரம ஞானத்தை யடையமாட்டார்கள். (தொடரும்)

சிவானந்தசாகரயோகீஸ்வரர்.

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

சந்தா நேயர்களனைவர்க்கும் மாதமாதம் தவிறாது சஞ்சிகை யனுப்பிவருகிறோம். ஆயினும் சிலருக்குச் சேராமல் போகிறதெனத் தெரிவதால் அப்படிச் சேராதவர்கள் அதேமாதக் கடைசிக்குள் நமக்குத் தெரிவித்தால் வேறொரு சஞ்சிகை யனுப்பப்படுமென்று விளம்பரம் செய்து அவ்வாறேயனுப்பிவருகிறோம்.

சிலர் வருட முடிவில் வி-பி. வந்தபின் வி-பி-யை யெடுக்காமல் திருப்

பிவிட்டு நமக்கு 3 அணு நஷ்டமுண்டாக்கியபின், "எனக்கு ஐப்பசி சஞ்சிகையும், கார்த்திகை சஞ்சிகையும் சேரவில்லை. அவற்றையும், இவ்வருட பஞ்சாங்கத்தையும், ஆனிமாத சஞ்சிகையையும் புக்போஸ்டில் அனுப்பினால் சந்தாதொகையை யுடனே மணியார்டர் செய்கிறேன். நான் சந்தாதாரனாக இருக்கவேண்டுமென்று பிரியமிருந்தால் அப்படி யனுப்புங்கள். இன்றேல் தங்கள் ரிஜிஸ்டரிலிருந்து என் பெயரை யெடுத்துவிடுங்கள்" என்று வரைகிறார்கள்.

இத்தகையோர்கள் சந்தாவினின்று நீங்கிவிடுவார்களென்றஞ்சி இவர்கள் கேட்கும் சஞ்சிகையை யனுப்புவதாயின் இன்னும் அளவற்றபேர்க்கு அவ்வாறே செய்யநேரிடும். அப்படியும் "சந்தா தொகையையும் நஷ்டம் 3 அணுவையும் அனுப்பினால், உமக்குச் சேராத சஞ்சிகைகளை மறுபடி யனுப்புகிறோம்" என்று தெரிவித்தோம். அதற்குமேல் நாம் என்ன செய்வது?

சஞ்சிகையை யாதரிக்கும் சந்தாதாரர்கள் நமக்கு வேண்டியதே. நமக்கு நஷ்டத்தை யுண்டாக்கும் சந்தாதாரர்கள் இருக்கவேண்டுமென்று நாம் எப்படி விரும்புவது? சஞ்சிகையை விரும்புவோர் இலௌகிக ஆன்மார்த்த ஞானங்களைப் பெறவும், தாய்ப்பாஷையின் அபிவிர்த்திக்கும் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கும் உதவிசெய்யவுமே சஞ்சிகையை வாங்கியாதரிக்கவேண்டும். அத்தகையோரே உண்மையாய்ச் சஞ்சிகையை யாதரிப்போரும் அதனால் பயனடைவோருமாவார்கள்.

சில சந்தாதாரர்கள் மணியார்டர் அனுப்பும்போது சந்தா நம்பரை யறிவிக்காமல் வி-பி. வந்தபின் வாபீசு செய்துவிட்டு, பிறகு நம்பரை யறிவித்துத் தாங்கள் முன்னமே பணம் அனுப்பியிருக்க வி-பி. யேன் அனுப்பினீர்கள்? என்று நம்மேல் நிஷ்டூரமாய் வரைகிறார்கள். சிலர் ஜூன் மீ 14உக்குள் பணம் அனுப்பாமலும், அத்தேதி கழிந்தபின் பேசாமலிருந்து வி-பி. வந்தபின் பெற்றுக்கொள்ளாமலும், நாம் இங்கிருந்து வி-பி-யனுப்பும் சமயம் மணியார்டர் அனுப்பிவிட்டு வி-பி-யை வாபீஸ் செய்து நஷ்டமுண்டாக்கிவிட்டு, "நான் மணியார்டர் செய்திருக்க என் வி-பி. யனுப்பினீர்கள்?" என்று நம்மேலேயே குறை கூறுகிறார்கள்.

சந்தாதாரர்கள் இவ்வாறு நடந்துகொண்டால் நம் நாட்டில் போதுமான பத்திரிகைகள் எவ்வாறு நடைபெறுவது? அந்தோ நம்மவர்கள் பத்திரிகைகள் நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமானவைகள் என்ற உண்மையை யின்னும் உணராதிருப்பது மிக்க விசனிக்கத் தக்கவிஷயம். நண்பர்கள் இனியேனும் இவ்விஷயத்தில் கவனம்வைத்து நடந்துகொள்ளவேண்டுகிறோம்.

வருடக் கடைசியில் வீ-பீ-யனுப்பும் மாதத்திலும், அப்பணம் நம்மிடம் வந்தபின் சஞ்சிகையனுப்பும் அடுத்த மாதத்திலும், இந்த இரண்டு மாதங்களில்மட்டும் சஞ்சிகை சற்று தாலசியமாகவே வந்து சேரும்.

அதற்காகச் சந்தாதாரர்கள் மனம்பொறுக்க வேண்டுகிறேம். மற்ற மாதங்களில் 1, 2 தேதிகளிலேயே யாவர்க்கும் சஞ்சிகை யனுப்பப்படும். பஞ்சாங்கம்-இந்த வருடச் சந்தாவை முன்னுடி குறித்த தவணைக்குள் அனுப்புவோர்களுக்கெல்லாம் இவ்வருட மாசி அல்லது பங்குனியுடை அடுத்த வருட பஞ்சாங்கமே யனுப்பப்படும்.



பத்திராதிபர்.

பகவத்கீதை வசனம்.

(36-ம் பக்கத் தொடர்ச்சி.)

7-வது *மாயாரூப அத்தியாயம்.

[சர்வ கர்மங்களின் சந்நியாச ரூபமான சாதனம் பிரதானமாகவுள்ள முதல் ஷட்கத்தால் (6 அத்தியாயங்களால்) ஸ்ரீ பகவான் யோகத்தோடு கூட துவம்பத இலட்சிய ரூபமான ஞேயவஸ்துவைத் திருவாய் மலர்ந் தருளினர். இப்போது பிரம்மத்தின் பிரதிபாதனமே முக்கியமாகவுடைய இம்மத்திய ஷட்கத்தால் தத்பதரூபமான பரமான்மாவைக் கூறியருள் கின்றார். பகவத் சேவையைப்பற்றி கூறுவதற்காக இந்த ஏழாம் அத்தி யாயம் ஆரம்பிக்கப்படுகிறது. இங்கு பகவானை எத்தன்மைய சொரூப மாக சேவிக்கவேண்டும், பகவானது சொரூபத்தில் மனமானது எவ்வாறு நிலைபெறும் என்ற கேள்விகளை அர்ச்சுனன் கேட்கவேண்டும். அவன் கேட்காதிருந்தும் பரம கிருபா மூர்த்தியாகிய பகவானே அக்கேள்வி களுக்கு விடையருள்கின்றார்.]

இலக்ஷ்மீகாந்தனுகிய ஸ்ரீ பரந்தாமன் அர்ச்சுனனை நோக்கிக் கூறு கிறார் :—“ஏ பார்த்த! மோக்ஷமடையும்பொருட்டு அன்போடு என்னையே சரண்புகுவதாகிய யோகத்தைப் பயிலும் யோகியானவன் ஐயமின்றி என் சொரூபத்தை யெவ்வாறு அறிவானே அதைக் கூறுதும் கேட்பாயாக.

(அந்த பரமேஸ்வரனது சொரூபஞானத்தில் அதிகாரிகளை யபிமுக மாக்கும்பொருட்டு அந்த ஞானத்தின் அருமை பெருமைகளைப் பகவான் புகழ்ந்து கூறுகிறார்.)

ஏ அர்ச்சுன! அழியத்தக்க மாயையினுல் மறைக்கப்படாத மனத்தி னிடை என் சொரூபத்தை உள்ளபடி உண்மையாக அறிந்திருப்பவர்கள் அறியாத பதார்த்தம் ஒன்றுமேயில்லை. (‘என் நிஜ சொரூபத்தை யறிந்த வன் யாவற்றையு மறிந்தவன்’ என்றபடி.)

இத்தகைய பெருமைவாய்ந்த எனது சொரூபஞானமானது எனதருளின்றிக் கிட்டுவதருமை. பல்லாயிரம் மனிதர்களில் ஒருவனே எனது சொரூபஞானத்தை யடைய மனம்வைத்து முயல்வான். அப்படி முயலும் பல்லாயிரம் பேரில் ஒருவனே என் சொரூபத்தை யுள்ளவாறுணர்வான்.

[விசாரித்துப் பார்க்கும்போது இல்லாமற் போவதாலும், ஞானேதயத்தில் ஒழிந்துபோவதாலும் மாயை அழியத்தக்கதென்றார். சித்தசுத்தி

* வடநூலில் ஞானயோகம் என்று பெயர்.

வாய்ந்து ஆசையொழிந்தவிடத்து மாயையின் மறைப்பு நீங்குவதால் அத் தகையோர் மனம் மாயையால் மறைக்கப்படாதது என்றார். தேவர்கள் முதலியபேர் சங்கு சக்ர கதாகட்க கோதண்டபாணியும் இலக்ஷ்மீ சமேத னுமாகிய பகாவனை யறிந்திருக்கிறார்களெனினும் அது பகவானது உண் மை வடிவமன்றாம். அவரைப் பிரத்தியகான்மாவிற்கு அபின்னமான பிரம் மசொரூபமாய் யுணர்ந்தவர்களே அவரது நிஜ சொரூபத்தை யுணர்ந்தவ ராவர்.]

ஏ பார்த்த! மண், நீர், தீ, வாயு, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம், இவ்வெட்டுவிதமான அபரப் பிரகிருதியினும் வேறாய் உலகின்கண்ணுள்ள அனைத்தையும் தாங்கிக்கொண்டு தேகத்தின்கண்ணும் சீவரூபமாய் நிற் பது எனது மாயையேயாகும். இச்சீவவடிவ பரப்பிரகிருதியே உலகனைத் தையும் தரித்திருப்பது. இவ்வுலகிலுள்ள சேதனு சேதனங்களனைத்தும் மேற்கண்ட இரண்டு பிரகிருதிகளாலும் உண்டாகின்றவைகளே.

ஏ அர்ச்சுனு! பூதங்களனைத்தும் இவ்விரண்டு பிரகிருதிகளின் காரியங் களே யென்பதை யுனதறிவினுல் நிச்சயித்துணர்வாயாக. நானே சீவ வடிவத்தால் பிரவேசித்து இந்நாமரூபத்தோற்றமாகிய யாவற்றையும் தாங்கி நிற்கிறேன். என்னின்வேறாக எந்தப் பொருளும் ஒரு பொரு ளைத் தாரணம் செய்யும் சமர்த்துடையதல்ல. ஆகையால் பிரபஞ்சத்தின் உற்பத்திக்கும் நாசத்திற்கும் நானே காரணன்.

(இப்போது பகவான் பரமேசுவரனுன நானே எனது மாயாசக்தி யால் சிருட்டித்து இரக்ஷித்துச் சங்கரிக்கிறேனுதலில், உண்மையில் எனக் கயலாக ஒரு பொருளுமில்லை யென்று அருளிச்செய்கின்றார்.)

ஏ பார்த்த! யாவற்றிற்கும் காரண பூதமாகவுள்ள என்னையன்றி இப் பிரபஞ்சத்தைத் தாங்கத்தக்க பொருள் வேறெதுவுமில்லை. பல வர்ண மான அனேகம் மணிகளினிடையே யொரு நூலானது சென்று கோர் வையான அம்மணிகளைத் தாங்கி நிற்பது போல, பல பேதங்களாகக் காணப்படும் எல்லா வஸ்துக்களிலும் நானே அந்தரியாமியாய் நின்று அவையனைத்தையும் தாங்கும் தன்மையைக் கூறுதும் கேட்பாயாக.

சகல ஜலங்களிலுமுள்ள இரசதன்மாத்திரை வடிவ மதுரம் நானு கின்றேன். சூரிய சந்திரர்களிடத்துள்ள ஒளி நானுகின்றேன். வேதங் களிலுள்ள பிரணவம் நானுகின்றேன். ஆகாயத்திலுள்ள ஒலி நானுகின் றேன். பிருதிவியிலுள்ள கந்தம் நானுகின்றேன். அக்னியிலுள்ள உஷ் ணம் நானுகின்றேன். சர்வ புருடர்களிடத்திலுமுள்ள ஆண்மை நானு கின்றேன். சகலப் பிராணிகளிடத்துமுள்ள சீவனமும் நானுகின்றேன்.

அறிவாளிகளிடத்துள்ள அறிவாகிய யுக்தி நான். தவசிகளிடத் துள்ள தவம் நான். புகழ்ச்சிபொருந்தினவர்களிடத்து புகழ் நான். வீரர் களிடத்துள்ள வலிமை நான். சத்துவம் இராசதம், தாமதம் என்ற மூன்று குண பேதமாய் விளங்காநின்ற சகல பொருள்களும் பரமேசுரனுகிய என்

ணிடத்தே தோன்றுகின்றன. அவை பற்றி நிற்பதும் என்னையே. ஆனல், ஏ அர்ச்சுன ! அக்கற்பிதமான பதார்த்தங்களில் நான் தோன்றுவதில்லை. நான் அவற்றில் சாட்சிமாத்திரமாக நிற்பனேயன்றி அவற்றை யாதாரமாகக்கொண்டிரேன். இப்போது நான் கூறிய மயக்கத்தக்க முக்குணங்களின் வயப்பட்டு விவேகமிழந்திருக்கின்ற உயிர்களனைத்தும் எக்குணங்களையும் கடந்து நிற்கும் பரமேசுரனாகிய என்னை யறியமாட்டா.

(அநாதியாகிய மாயையின் முக்குண வயப்பட்ட உயிர்களனைத்தும் சுதந்தரமின்மையின் முக்குண வடிவமாகிய மாயையை நிவர்த்திசெய்யச் சக்தியுடையவனல்லவே என்னும் அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான், அந்நிய உபாயங்களால் மாயாநிவர்த்தி யுண்டாகாதெனினும், ஈசுரபக்தியால் உண்டாகும் தத்துவஞானத்தால் மாயாநிவர்த்தி கூடும் என்று அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! இம் முக்குண சுபாவத்தையுடைய என் மாயையை வெல்வது யாவர்க்கும் அரிதே. என்னையே எப்போதும் மெய்யன்போடு வழிபடும் மனமுடையோர்மட்டுமே தத்துவ ஞானத்தால் இம்மாயையை நிவர்த்திக்கக்கூடும். (தொடரும்.)

சீடன்.



நந்திக்கலம்பக வரலாறு.

இப்பொழுதைக்குச் சுமார் ஆயிரத்திருநூறாண்டுகட்கு முன் இரணிய வர்மனென்பானோரிறைவன், ஒளவைப்பிராட்டியார் "சான்றோருடைத்து" எனப் புகழ்ந்து கூறிய தொண்டைமானாட்டைப் பரிபாலித்து வந்தான். அவனுக்கிருபுத்திரருண்டு. அவர்களுள் மூத்தவனாகிய நந்தி அபிமான ஸ்திரீயின்கட் டுதித்தோன். பட்டமஹிஷியின் புதல்வ னிளையவன். அவன் பெயர் காடன். இரண்யவர்மன் விருத்தாப்பிய தசையடைதலும் குலமகனுக் கரசளிக்காமல், அபிமானத்தால் பொதுஜன சம்மதத்தையும் பாராட்டாது, முதியோனென்னுங் காரணத்தைக்காட்டி நந்திக்கே மகுடஞ் சூட்டி, தந்திரத்தில்வல்ல கம்மாளனொருவனை அவனுக்கு மந்திரியாக்கிச் சிறிது காலத்திற்குள் தேகவியோகமடைந்தான்.

நந்திவர்மன் தனது வெண்கொற்றக்குடை யாவர்க்கு மினிமைசெய்ய செங்கோலோச்சி வருவானாயினன். கல்வியின்னினிமையைக் கண்டவனாகலின் கவிவாணர் களிப்பக் கருந்தனமீயுங் கற்பக வள்ளளலா யிருந்தான் நந்திவர்மன்.

தன் தந்தையின் தீயொழுக்கத்தால் தனக்குரிய நாட்டை யிழந்த இளையோன், மூத்தோனிடம் பகைமை கொண்டு அரசைக்கவரும் சமயம் நோக்கியிருந்தான். பிரஜைகளிற் பலர் அவனுக்குடந்தையாயினர். இதை யறிந்த நந்தியின் மந்திரி இயந்திரக் கட்டிலொன்று சமைத்தான். அது தன்மேல் எவராவது படுத்து நித்திரை செய்யின் சத்தமிட்டுக்கொண்டும்

விழித்திருப்பின் நிசப்தமாயுமிருக்குந் தன்மைத்து. அதையவனரசற்குக் காட்டி, "ஏந்தால்! மாற்றாரும்மை மாய்க்கக் கருதியுள்ளார். நீவிர் மிக்க எச்சரிக்கையோடிருத்தல் வேண்டும். இரவிற் பகைவராலின்னலுண்டா காவண்ணம் இக்கட்டிலின்மீதே கண்டுயில்வீராக," வென்றான். "மந்திரிக் கழகு வரும்பொருளுரைத்தலன்றோ"? அரசனுமங்ஙனமே யொழுகி வந்தான்.

ஒருநாள் நடுநிசி. பேய்களுமுறங்குங்காலம். "கருமமே கண்ணாயினார் கண்துஞ்சார்" என்றபடி, காடவனும் அவன் சகாக்களும் அரண்மனைக்குப் புறத்திலொருசிறை பதிவிருந்தனர். ஒவ்வொருவர் கரத்திலும் கதிரவனொளிபோல் மின்னுங்கட்கம் பிரகாசிக்கின்றது. பார்த்திபன்றன் பள்ளியறைக்கு நேராக வெளியினின்ற விவர்கள் சிறிது நேரத்திற்குள் இடைச்சுவரில் கன்னக்கோல்கொண்டு ஆள் நுழையக்கூடுமான வழியமைத்துவிட்டனர். அமைத்ததும் உண்ணுழையத் தொடங்கினவர்கள், உள்ளே அரவமுண்டாதலைக் கேட்டு,'ஆளோசைபோலும்' என்றையுற்று அற்றம் நோக்கிநின்றனர். அச்சமைய மரசனும் கன்னவோசையாலெழுப்பப்பட்டு விஷயமுணர்ந்து உடைவாளை யுருவிக்கொண்டு துவாரத்தினருகில் நின்றிருந்தான்.

காவலன் கண்விழித்ததால் கட்டிலினொலியு மோய்ந்தது. சற்று நேரத்திற்குள் ஒருவன் உள்ளே நுழைந்து வருவதைக் கண்டதும் வேந்தன், அவனை ஒரே வீச்சில் வெட்டி வீழ்த்தினான். பின்னும், ஒருவர்பின்னொருவராய் நுழைந்த அனைவரும் துணிபட்டொழிந்தனர். எஞ்சிநின்ற இளங்குமரன், 'என்னே வியப்பு! உட்புக்கார் யாதாயினர்? ஒருவரேனுந் திரும்பினாரில்லையே. சதிபோலும். நாம் அவசரப்படலாகாதெ'ன்றெண்ணி யாண்டிருந்ததோர் கரிப்பானையையெடுத்து, ஓர் கழியிற்செருகி யுட்புகவிட்டான். அதன்மேலும் வெட்டுப்பட்டது. கண்டான்காளை. 'ஓ ஓ மோசம்! நந்துணைவர் நந்தியால் வெட்டுண்டனரே' என மிக்க விசனத்துடன் போய்விட்டான்.

இக்காடனே இலக்கண விலக்கியக் கடலின் கரைகண்ட பண்டிதன். கவி பாடுவதில் மிகச் சமர்த்தன். ஆகலின், அவன் வில்வாளியினும் சொல்வாளியே சிறப்புடைத்தென் றுன்னித் தன் தமயனாகிய நந்தியைப் பாட்டுடைத்தலைவனாக்கி, அறம்வைத்துக் கலம்பகமென்னுமோர் பிரபந்தமியற்றி யரசனதவைக்களமனுக, அமைச்ச னச்சுவடியைப் பார்த்து இஃதீண்டரங்கேறுந் தன்மையுடைய தன்றெனக் கூறியனுப்பிவிட்டான். எங்ஙனமேனும் அவ்வசைக்கவிக ளரசனாற் கேட்கப்படவேண்டுமெனக் கருதிய காடவன், அதனைப் பல பிரதிகள் செய்து பிரசுரப்படுத்துவானாயினான். அச்சூழ்ச்சியை யறிந்த வமைச்சன், 'அந்நூலை யொருவரும் ஓதல்காது. எவரேனும் மீறி ஓர் பாடலோதினும் தண்டிக்கப்படுவார்' எனப் பறை சாற்றுவித்தான். இஃதிங்ஙனமாக,

ஓர்நாளிரவு பத்துமணி சுமாருக்கு ஒரு வீட்டுவாயிலில் அழகிய மாதொருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவள் ஓர் பரத்தை. அவள் வீதியில் போகின்றவர்களை யுற்று நோக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் யாரோ வொருவரது வருகைக்காகக் காத்திருக்கிறாள் போலக் காணப்படுகிறது. வெகுநேரம் நின்றிருந்த அம்மாது திண்ணையின்மேல் படுத்து நித்திரை போய்விட்டாள். தெருக்கதவை மூடாமலே உறங்கிக் கொண்டிருந்தவள் யாதோ காரணத்தால் திடுக்கிட்டு விழித்துப்பார்த்து தன்மீது சந்தனக்குழம்பு ஊற்றப்பட்டிருப்பதைப் பார்த்து வியப்புற்று, 'இக்காரியஞ் செய்தோர் யாவர். நம் காதலனாகிய காடவன்தானோ? இவ்வாறு செய்தது. அவருக்காக வெகுநேரம் காத்திருந்தும் காணவில்லையே. இப்போது வந்தாரோ?' வெனத் திகைத்து நின்றாள். அவ்வமயம் அவள் காணாதபடி மறைந்திருந்த காடவன், அச்சந்தர்ப்பத்திற் கேற்றவோர் செய்யுளடியை நந்திக்கலம்பகத்தினின்று பாடினான். நகரி சோதனையின்பொருட்டு வந்து ஆண்டு நிகழ்வதியாதோவென வறியப் புறத்தே பதுங்கிநின்ற சேவகனொருவன் அப்பாடலைக் கேட்டதும், உள்ளே நுழைந்து அவனைப் பிடித்துக்கொடுபோய் அரசன் முன் நிறுத்தி நிகழ்ந்தவற்றை நிகழ்த்தினான். எதிரில் நிற்போன் தன் இளவலெனக் கண்ட மன்னன், அப்பாடலைப் பாடச்சொல்ல, அவன்

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றாரோ தடவினார்—பைந்தமிழை
ஆய்கின்ற கோனந்தி யாக்கந் தழுவாமல்
வேகின்ற நெஞ்சே விரைந்து எனப் பாடினான்.

அதைக்கேட்ட நிருபன், 'ஆஹா! நமது வெற்றி முதலிய சிறப்புக்களைப் பற்றிக் கூறும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய பாடல்களையுடைய விந்நூலை, யாது நேர்வதாயினும் கேட்பதே துணிபு' எனத் தீர்மானித்துத் தம்பியைப் பார்த்து அதைக் கூறும்படி சொல்ல, அவன் 'கொற்றவா! நீரிந்நூலைக் கேட்பதாயின் மயானத்திற் சிதையடுக்கி யதின் மேலிருந்து கேட்கவேண்டும்' என்றான். பல்லோர் தடுத்தும் கேளாமல் நந்திவர்மன் காடவன் கூறியவாறே யிருந்து, நூலைக் கேட்டுவருமளவில் தாதுக்க ளொடுங்கிக்கொண்டுவந்தன.

வானுறுமதியை யடைந்ததுன்வதனம்
வையக மடைந்த துன்கீர்த்தி
கானுறு புலியை யடைந்ததுன் வீரம்
கற்பக மடைந்த வுன்கரங்கள்
தேனுறு மலராள் அரியிடஞ் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென் கலியு மெவ்விடம் புகுவோம்
எந்தையே நந்திநா யகனே.

என்னும் இறுதிச் செய்யுளைப் பாடி முடிந்ததும், நந்தி பேசவுமாட்டாதவனாய் தன் கையைக் காட்டிக் கணையாழியைக் கழற்றிக்கொள்ளும்படி தம்பிக்குக்காட்டிச் சமிக்கைசெய்து இறந்தனன்.

காடவனும் கணையாழி பெற்றுத் தமயனுக் கீமக்கடன் முடித்து, முடிசூடி யரசனாயினன்.

நந்தி கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர் சோமேசா—சந்ததமும்
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. (சோமேசர் முதுமொழி வெண்பா.)

பூ. ஸ்ரீனிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

ஸ்ரீமத் அபேதானந்த சுவாமிகளின் உபந்நியாசம்

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸநாதந தர்மம் தத்துவ விசாரம் செய்வது.

தத்வ விசாரம் செய்து உண்மையை அறிவதைத் தவிர பிறவிப் பெருங் கடலை நீந்துவதற்கு வேறு வழியில்லை. அதனால் யாவரும் தத்வ விசாரம் செய்து உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும். பந்தத்தினின்றும் விடுபட்டு பூரணனும் தீர்த்தனுமாவதற்குத் தத்வ விசாரம் அவசியம். அதற்குப் பூர்வாங்கங்கள் திரிகரணசுத்தி, மனோ வாக்குக் காயங்களினால் தூய்மையாய் இருப்பதே. தீய ஒழுக்கத்தை விட்டு தூய ஒழுக்கம் புகுவான் வேண்டும். நல்லோன் தீ எறிவையும் பாழ் நரகையும் பலபல பாவங்களைக் காட்டிக் காட்டி பயமுறுத்த வேண்டியதில்லை. எண்ணி எண்ணித் தேய வேண்டியதில்லை. அதன் கோரத்தையும் பயங்கரத்தையும் எண்ணி நடுங்க வேண்டியதில்லை. அந்தக் கொடுமையைக் கண்டு அமெரிக்கர்கள் பெரு நாண முறுகின்றனர். நமது கரும சித்தாந்தம் மிகவும் விசேஷமானது. அது காரண காரியத் தொடர்ச்சியாய் ஒழுங்குள்ளது.

கிருஸ்தவக் கொள்கையோ "முன்னே ஒருவன் முடித்தான் தன் துப்பெல்லாம்" என்பதுபோல முன் தீர்மானமும் ஒழுங்கீனமும் உள்ளது. அதில் ஞாயமும் இரக்கமும் இல்லை. அம்மாதிரியான சிருஷ்டி கர்த்தா இருக்க முடியாது. நமது சாங்கிய மார்க்கம் அங்ஙனம் கூறுவதின்று. புருஷப் பிரகிருதி ஸம்யோகத்தினால் தோற்றப்படும் உலகம் காரண காரியமாய் விளங்கும்.

சிருஷ்டி சக்கிர யோஜனைக்கும் அது ஒத்தது. மதகர்த்தா ஒருவரல்ல. ஸநாதந தர்மம் ஒரு ரூபத்தின்பேரில் நிலைத்திருப்பதன்று. மற்ற மதங்களோ என்றால் ஒவ்வொரு ஆதி புருஷன் பேரில் நிலைத்திருப்பது. புத்

தரை எடுத்துவிட்டால் பௌத்தமதம் இல்லை. கிருஸ்துவை எடுத்துவிட்டால் கிருஸ்துமதம் கிடையாது. ஸௌராஷ்டிரரை எடுத்துவிட்டால் அவர் மதம் கிடையாது. ஆனால் ஸநாதந தர்மத்திலோ அதற்கு ஆதிகர்த்தா என்பவரும் மூலபுருஷன் என்பவரும் ஒருவரன்று. அதன் புராதன புருஷர்கள் பலர். யாரை வேண்டுமானாலும் உள்படுத்தலாம். இயேசு, மோஸஸ், புத்தர், மகம்மது, கான்பூஷியஸ், ஸோராஸ்டர் முதலிய யாரும் விலக்கில்லை. ஸமஸ்த மதங்களும் ஒரே முடிவில் கொண்டுபோய் விடுகின்றன என்பது ஸநாதந தர்மத்தின் உண்மை. ஒரே மத்தியை பல முகங்களாலும் பல படியும் பார்ப்பது என்பது. நான் சிறு வயதில் பாடிக்கொண்டு திரிந்த ஒரு கீதம் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அதன் அர்த்தம் பல ஆறுகளும்போய் ஒரே சமுத்திரத்தில் விழுவதுபோலப் பல மதங்களும் இறுதியில் பகவானிடத்திலேயே கொண்டுபோய் விடுகின்றன. இதைக்காட்டிலும் சிறந்த ஒரு சித்தாந்தம் உண்டா? ஸ்ரீ கிருஷ்ணபகவான் மற்றொன்றும் கூறியிருக்கிறார். "யுகந்தோறும், யுகந்தோறும் புண்ணியம் தேய்ந்து பாவம் வளரும்பொழுதெல்லாம், பாவிகளை அழிக்கவும் சிஷ்டர்களைக் காக்கவும் நான் அவதாரம் செய்கிறேன்." உலகத்தில் மதவாராய்ச்சி சரித்திரத்தில் இதுவே முதல் முதல் இம்மாதிரி வார்த்தைகளில் சொன்னதாகும். பிறகு அந்தப் பாடத்தை வெகுபேர் ஓதினார்கள்.

தமிழகம்.



தெலுங்கு என்பது எது?

'தெலுங்கு' அல்லது 'தெனுகு' என்பது நமது பாரத நாட்டில் வழங்கிவரும் பலவிதமான தாய்ப்பாஷைகளில் ஒன்றாகும். இந்த பாஷையை வடமொழியில் 'ஆந்திரம்' என்பார்கள். தெலுகு, தெனுகு, தெலுங்கு என்னும் பதங்கள் எல்லாம் 'தெலிங்க' (ட்ரிலிங்க-Trilinga) என்னும் மொழியின் சிதைவுகளேயாம். ட்ரிலிங்கமாவது (திரிலிங்கம்) மூன்று லிங்கங்களடங்கிய நாடாகும். [வடமொழியில், 'திரி' (த்ரயம்) என்றால் 'மூன்று'; 'லிங்கம்' என்பது சிவனுக்கடையாளம்.] ஒரு காலத்தில் பரமசிவன் காலேசுவரம், ஸ்ரீசைலம், பீமேசுவரம் என்ற மூன்று பர்வதங்களினுச்சியில் லிங்காகாரமூர்த்தியாய் இறங்கி விளங்கினாரென்கிற ஐதீகமும் ஒன்றுண்டு. ஆகவே அம்மூன்று லிங்கங்களும் ஆந்திர தேசத்தின் எல்லைகளைக் குறித்தனவென்றும், திரிலிங்க-தெலிங்க-தெலுங்கு (தெலுகு-Telugu) தேசமென்று பெயராயிற்றென்றுங் கூறுவர்.

நிற்க, 'தாய்பாஷை' என்பதியாது? அது ஒன்றா, பலவா? நம் பாரத மக்களில் பெரும்பாலோர் இச் சொற்றொடரை தெளிவாய் அறிந்தார்களில்லை. சிலர் 'தாய்பாஷை' என்றால் தமது வீட்டு பாஷை (மதர் டங்-Mother tongue) என்கிறார்கள். சிலர் 'தாய்பாஷை' திராவிடமென வழங்கும் தமிழ் பாஷைதான் என்கிறார்கள். வீட்டு பாஷை எது? நாட்டு பாஷை எது? 'தமிழ் நாடு' முற்றிலும் தமிழ் பாஷை ஒன்றே வழங்கி

வருகின்றதா? சென்ற 1921ஆத்தில் விண்மீன்போல் தோன்றிமறைந்த கவிரத்னமாகிய ஸ்ரீமான் ஸி. சுப்ரமணிய பாரதியார் அவர்கள் 'எங்கள் தாய்' என்னும் தலையங்கத்தின் 3-வது பாட்டில்

"முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாளெனிற்
சிந்தனை யொன்றுடை யாள்"

என்றபடி பாரதத் தாயின் பாஷை ஒன்றல்ல. பதினெட்டு என்று கூறியுள்ளார். அவை திராவிடம், ஆந்திரம், கன்னடம், மராடம், கூர்ச்சரம், வங்காளி, ஹிந்தி, மலையாளம், துளுவம், காண்ட் முதலியனவே. இவை ஒவ்வொன்றும் 'தாய்பாஷை' என்பதற்கு ஐயமின்று. தமிழ்மக்கள் ஆந்திரதேசத்தவர்களை 'வடுகர்' என்று கூறுவதுமுண்டு. அதாவது வடக்கு தேசத்தவர், வடக்கத்தியார். தாய்பாஷை என்பது 'இராஜபாஷை'யைப் போல் ஒன்றல்ல. நமது இந்தியா முழுவதும் பரவி ஒருவர்க்கொருவர் பொதுவாய் அறிந்துகொள்வதற்குப் பெரும்பாலும் எளிதா யேற்பட்டுள்ள பாஷை 'ஆங்கிலம்' (English) என்கிற இராஜபாஷையேயாகும். ஆனால் ஆங்கிலத்திலும் தமிழ் நீங்கலாகவுள்ள ஏனையபாஷைகளிலும்தமிழ் மொழிகள் கலந்திருப்பதுண்மையே. தமிழின் தொன்மையையும் பெருமையையும் விசேஷமான ஆதாரங்களோடு நமது சகோதரர் ஸ்ரீமான் து. தீனதயாளு அவர்கள் 'ஆனந்தன்' 7-ம் ஆண்டு மதிகளில் நிரூபணஞ் செய்துளார்.

தெலுங்குபாஷையின் எல்லை:—தெலுங்கு தேசத்தில் பிறந்து தமிழ்நாட்டில் குடியேறி நிலைத்துவிட்டவர்களில் சிலர் தமிழும் சிலர் தெலுங்கும் எறக்குறைவாகப் பேசப் பழகிவிட்டனர். அதாவது சிலர் தமிழ்நாட்டில் நிலைத்துவிட்டதனாலே தெலுங்கை மறந்துவிட்டு தமிழே பேசுகின்றனர். பிற்கூறிய சிலர் தமிழ்நாட்டில் பிரவேசித்து தமிழ் பேசுவோருடன் கலந்து வசித்தபோதிலும் தெலுங்கு பாஷையிலே பேசுகின்றனர்கள். அதை யவர்கள் மறந்துவிடுகிறதில்லை. தமிழ் பேசவும் கற்றுக் கொள்ளுகின்றனர். இவ்விருதிறத்தாருடைய 'தாய்பாஷை' எது? தெலுங்கேயாகும். தமிழாகாது. இவ்விதமே தமிழ்நாட்டிலிருந்து தெலுங்கு (ஆந்திர) தேசத்தில் குடியேறி நிலைத்துவிடுகிறவர்களின் 'தாய்பாஷை' தமிழேயாகும், தெலுங்கன்று. ஆங்கிலேயரின் 'தாய்பாஷை' ஆங்கிலேயம்—இங்கிலீஷ்தான். சுருங்கச் சொல்லின் 'தாய்பாஷை' என்பது ஒவ்வொரு குடும்பத்தினர் தத்தம் வீட்டில் பேசும் பாஷை யெனலாம். கலியுக விநோதங்களில் ஒன்றியாதெனில் பாரதமக்கள் பலபாஷை கலவாது மொழியார்! இதுதான் ஸம்பாஷணக்ரமம் (ஸம்பாஷணை+(அ)க்ரமம்) போலும். நாம் எடுத்துக்கொண்ட தலையங்கத்தினின்றும் வெகுதூரம் விலகிவிட்டது பொறுப்பீராக,

தெலுங்குபாஷையானது இருபதுகோடி இந்துக்களால் பேசப்படுகின்றன. அவர்கள் இந்தியாவின் கிழக்குபாகத்தில், சென்னையிலிருந்து கடற்கரையைச் சார்ந்த வங்காளம் (Bengal) வரையிலும் உள்ளே தக்ஷிண (Deccan) ப்ரதேசங்களிலும் வசிக்கின்றனர். இந்த எல்லைகளுக்குள் அடங்கியவை பின் வருவன:—பிரிட்டிஷ் அரசாங்கமுள்ள கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணு, நெல்லூர் முதலிய ஜில்லாக்கள்; நிஜாம் பிரதேசங்களின் பெரும்பாகம்; ஒப்புக்கொடுத்த ஜில்லாக்கள் (Ceded Districts)—கர்நூல், கடப்பை, பெல்லாரி (வடக்கு, கிழக்கு பாகங்கள்மட்டும்); மைசூர் பிராந்தியத்தின் கிழக்குபாகமும் வட ஆற்காடுமே.

தெலுங்கு தேசத்தின் சரிதம்:—தெலுங்கரின் பூர்வ சரித்திரம் வேண்டுவோர் ' Elphinstone's History of India ' 'எல்பின்ஸ்டோன்' என்பவர் இயற்றிய ' இந்திய சரித்திரம்' என்னும் புத்தகத்திற் காணலாகும். பதினோரும் நூற்றூண்டின் இறுதியில் ' விஷ்ணுவர்த்தனன் என்னும் அரசனும், பதினாறும் நூற்றூண்டின் முதலில் ' கிருஷ்ண ராயலு ' என்னும் மன்னனும் விஜயநகரத்தை யாண்டுவந்தனர். இவ்விரண்டு பூபதிகளே தெலுங்கு கலைஞானத்தைச் சாலவும் அபிமானித்து மிகுந்த பிரக்யாதி பெற்றூர்கள். 'விஷ்ணுவர்மன்' அரசாட்சியில்தான் ' மஹாபாரதத்தின் முதற்பாகம் வடமொழியிலிருந்து தெலுங்கில் மொழிபெயர்க்கப் பட்டதெனக் கூறுகின்றனர். தெலுங்கான (Telingana) தேசத்தில் பழைய தலைநகராயிருந்த 'வாரங்கல்' (Warangal) சென்ற 1332-ம் வருஷத்தில் மகம்மதியர்களின் கைவசமாயிற்று. அவர்களே 1556-ம்ஆண்டு விஜயநகரத்தையும் கைப்பற்றினார்கள். மகம்மதிய அரசாட்சியில் தெலுங்கு பாஷை ஆதரிப்பாரற்றிருந்தது. தவிரவும், அப்பாஷைக்குள் இந்துஸ்தானி முதலிய அந்நிய பதங்கள் நுழைந்துகொண்டன.

தெலுங்கில் வடமொழிப் பதங்கள் பிரயோகப் படுத்தப்பட்டாலும், தெலுங்குபாஷை வடமொழியினின்று வந்ததன்று. தென்னிந்தியாவில் வழங்கிவரும் இதர பாஷைகளாகிய தமிழ், கன்னடம் முதலிய பாஷைகளின் தாதுக்களை (Roots) ஒட்டியே சுத்தமான தெலுங்கு பாஷை ஏற்பட்டது. தாய்ப்பாஷைகளில் தெலுங்கு நீங்கலாகவுள்ள ஏனைய பாஷைகளுக்கு ' திராவிடம் ' என்றும் கூறுகின்றனர்.

ஆனல் தெலுங்கிலுள்ள பதங்களும் முக்கியமாய் உச்சரிப்பு விஷயத்தில் வடமொழியை நாடியிருக்கின்றன. வடமொழியிலுள்ள ஒரு சுலோகத்தை (கிரந்த அக்ஷரங்களிலோ அல்லது தேவநகரி எழுத்துக்களிலோ) தமிழில் எழுதுவதைக்காட்டிலும், தெலுங்கில் பதவுச்சரிப்பை நன்றாய் அறிந்துகொண்டு திருத்தமாய் எழுத வியலும். இதற்குக் காரணம் யாது? தெலுங்கு தேசத்தார் அந்தணர்களுடைய மதத்தைத் தழுவினார்கள். பிற்கூறியவர்கள்தான் மத அதிகாரிகளாயும், சாஸ்திர விற்பன்னர்களா

யும் இருந்தனர். அவர்களுடைய பாஷை வடமொழியாதலாலும் அவர்கள் அநேகம்பேர் தெலுங்கரோடு கலந்து வசித்ததாலும், தெலுங்கு பாஷையில், அடிக்கடி கையாளப்படும் பதங்கள் முக்கியமாய் தத்வம், வேதாந்தம், சாஸ்திரம் இவைசம்பந்தமான வாக்கியங்கள் வடமொழியிலிருக்கின்றன. ஆதி தெலுங்கு இலக்கண கர்த்தாக்களனைவருங்கூட பிராமணர்களாததால், அவர்கள் தமது நூற்களில், ஒழுங்கு, உவமை முதலிய இலக்கணங்களை வடமொழியிலிருந்தே ஆக்கினர். அன்றியும் இலக்கணத்தையே வடமொழியில் பெரும்பாலுமியற்றினர்.

C. S. துரைஸ்வாமி அய்யங்கார்,
'ஸ்ரீரங்கவிலாஸ்', சைதாப்பேட்டை.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்.

(39-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனந்:—ஆம்.

அம்:—நீயொரு பெரிய இரகசியத்தைச கண்டு பிடிக்கவேண்டுமென்று கூறினேன். உள்ளே சென்றதே அங்கிருக்கும் ஆச்சரியத்தையும் திடுக்கிடும் சம்பவத்தைக்கண்டு அஞ்சமாட்டாயே?

ஆனந்:—"நான் ஒரே வார்த்தையாய்க் கூறுகிறேன் நான் வேலைக்கு ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான்.

அதன் பிறகு அம்மனிதன் வீட்டின் கதவைத்திறந்து ஆனந்தலிங்கையுள்ளே யழைத்துசசென்று வருகிறவர்களை வரவேற்கும் முன் கூடத்தில் அவனை உட்காரவைத்துவிட்டு, "இரு வருகிறேன்" என்றான்.

ஆனந்.—சற்று இரு, உன் பெயரென்ன?

அம் :—என் பெயர் கறுப்பண்ணன் என்றான்.

ஆனந்:—இது உன் மாளிகை தானே.

அம்:—ஆம்.

ஆனந்:—" சரி போதும். விவகாரம் நடக்கட்டும்" என்றான்.

அம்மனிதன் ஆனந்தலிங்கை யங்கு விட்டுவிட்டு அக்கூடத்திலிருந்த ஒரு கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான்.

ஆனந்தலிங் அக்கூடத்திலிருந்த விளக்கைச் சற்று தூண்டிவிட்டு அங்கிருப்பவைகளைப் பார்த்துக்கொண் டிருந்தான். வேறே தீபமில்லாததால் கூடத்திற் கப்பால் தாழ்வாரத்தில் வெளிச்சமில்லை. இவன் பார்த்துக்கொண்டேயிருக்கையில் தாழ்வார நிழலில் யாரோ ஒரு ஸ்திரீ வந்து நிற்பதுபோல் தோன்றியது. உற்றுப்பார்த்தான். அம்மாது முகம் வாடி வதங்கி ஒரு பேய்போல் தோன்றினாள். அதிலும் அம்மாது தன்னைச் சாடைகாட்டி யழைப்பதுபோல் ஆனந்தலிங்குக்குத் தோன்றியது. அவன் யோசிப்பதற்குள் ஆள் வரும் சத்தம்கேட்டது.

அம்மாதும் அதை யறிந்து சட்டென்று திரும்பினாள். ஆனந்தலிங் மிக்க துரிதமான சமயயோசனை யுடையவனாதலின், உடனே தன் ஜேபியி

விருந்த தன் பெயர் தொழில் முதலியவை யச்சடித்த ஒரு சீட்டை யந்த மாதிடம் விசிறியெறிந்தான். அச்சீட்டு அவள் தலைக்குமேல் பறந்து எதிரில் விழுந்தது. அவள் அதைச் சட்டென்றெடுத்துக் கொண்டுபோய் விட்டாள்.

மறுபடியும் கறுப்பண்ணன் கூடத்திற்கு வந்து ஆனந்தலிங்கை நோக்கி "எழுந்து வா?" என்றான்.

ஆனந்தலிங் அவன் கூடவே செல்லும்போது இடையில் அவன் கண்களுக்குப் புலப்பட்டவைகளில் அற்பமானவைகளைக்கூட விடாமல் கவனித்தான். கடைசியில் சில அறைகளின் வழியாய்ச் செல்லும்போது அங்கெல்லாம் தீபமில்லை. ஆதலால் தன் கைகளுக்குத் தென்பட்டவைகளாலும் முன்னே செல்லும் கறுப்பண்ணனுடைய காலடிச் சத்தத்தாலும் அந்த அறைகளில் விலையுயர்ந்த சாமான்கள் இருக்கின்றனவென்றும், கீழே உயர்ந்த ஜமக்காளம் விரிக்கப்பட் டிருக்கிறதென்றும் அறிந்து கொண்டான்

கறுப்பண்ணன் கடைசியில ஒரு அறையின் வாயிற்படியில் நின்று ஆனந்தலிங்கை நோக்கி, "இப்போது காணப்போகும் காட்சியைக்கண்டு திடுக்கிடமாட்டாயே?" என்றான்.

ஆனந்:—"நான் அத்தகையவை யெத்தனையோ கண்டிருக்கிறேன். விவகாரம் நடக்கட்டும்" என்றான்.

கறுப்பண்ணன் உடனே கதவைத் திறந்து மெதுவாய் உள்ளே சென்றான் ஆனந்தலிங் சற்றுநேரம் வாயிற்படி யருகில் நின்று பார்த்தான். அந்த அறையில மெழுகுவத்தி தீபங்கள் எரிந்துகொண் டிருந்தன. மலர்களின் சுகந்தம் இரம்மியமாய் வீசிற்று.

அந்த அறை நன்றாய்ச சுத்தம் செய்யப்பட்டிருந்தது. அறையின் மத்தியில் ஒரு மேஜைமேல் சவப்பெட்டியின் பீடம் ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. அதில் ஒரு கன்னிகையின் சவம் வைக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் ஒரு மேஜையின்மேல் தொட்டிகளில் பலவித புஷ்பச்சட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் நறுமணந்தான் கதவைத் திறந்ததே வீசியது.

கறுப்பண்ணன் சவத்தின் தலைப்பக்கம் போய் நின்று ஆனந்தலிங்கை வாவென்றழைத்தான். ஆனந்தலிங் அவ்வாறே சென்று சவத்தின் அருகில் நின்றான். அவன் அதைக்கண்டதே மிக்க வியப்பும் துயரமுமடைந்தான்

அப்பெண்ணின் உருவம் மிக்க அழகுடையதாயிருந்தது. சவமாயாவது உயிரோடாவது அத்தகைய உருவத்தை யவன் கண்டதேயில்லை. அவன் அதை யுற்று நோக்கிக் கொண்டேயிருக்கையில் பின்னால் ஒரு சத்தம் கேட்டது. அசசத்தம் கறுப்பண்ணன் தன் துயரத்தை யடக்கமுடியாமல் "அய்யோ! அவள் அழகு யாருக்கிருக்கிறது" என்றதாலுண்டானது.

அந்தச்சத்தம் ஆனந்தலிங்கின் மனதிற்கு மிக்க சந்தேகமான அபிப்பிராயத்தை யளித்தது. அதாவது கறுப்பண்ணன் தன் துயரத்தை வெளியிட்ட சத்தத்தால் அவன் துயரம் நிஜமானதல்லவென்றும் தன்னையேமாற்றச் செய்த தந்திரமே யென்றும் அவன் மனதிற்பட்டது.

ஆனந்தலிங் சற்று குனிந்து உற்றுப்பார்த்தான். அவன் மனதில் திடுக்கிடக் கூடிய ஒரு சந்தேக முண்டாகிவிட்டது. அதாவது அச்சவத்தின் கன்னங்களில் இரத்தம் இருப்பதுபோன்ற பிரகாசம் தோன்றியது. மிக்க ஆச்சரியமும் கலவரமும், இவற்றோடு பின்னும் சற்றுநேரம் பார்த்தபோது, இன்னொரு சிந்தனையும் உதித்தன.

அதாவது இக்கன்னிகையை யெங்கோ தான் பார்த்திருப்பதுபோல் சந்தேகமுண்டாயிற்று. அவன் மனச்சுபாவம் புகைப்படம் பிடிக்கும் கருவி போன்றது. அதாவது அவன் எதைப் பார்த்தாலும் அவனை யறியாமலே அவன் பார்த்த விஷயங்களனைத்தும் புகைப்படம் பிடித்தது போல் அவன் மனதில் பதிந்துவிட்டிருக்கும். ஆகையால் இப்போது அவன் மனதில் இப்பெண்ணை யெங்கோ பார்த்திருப்பதாய்க் கவனம் வரவே பின்னும் சிந்தித்தான். ஆ! யாவும் விவரமாய்க் கவனத்திற்கு வந்தது. ஒரு பெரிய மாளிகையில் மிக்க ஆடம்பரமான கூட்டத்தில் யாவரும் நடனம் செய்யும் சங்கத்தில் இவளைக் கண்டதாய் மனதிற்கு விளங்கிவிட்டது. உடனே நன்றாய்க்குனிந்து அவள் முகத்தைப் பார்த்தான்.

அச்சமயம் கறுப்பண்ணன் அவன் கன்னத்தில் கைத்துப்பாக்கியை நீட்டிப் பத்திரம் என்றான். ஆனந்தலிங் உடனே தலை நிமிர்ந்து சட்டென்று திரும்பி கோபத்தோடு "இம்மாதிரி என் கன்னத்தில் காட்டப்பட்ட துப்பாக்கிகள் எத்தனையோ வுண்டு. ஆயினும் நீ யிம்மாதிரி யென்னைப் பயப்படுத்தவேண்டிய காரணமென்ன?" என்று கேட்டான்.

கறுப்:—"நான் இப்பெண்ணை யென் உயிரினும் அதிகமாய் நேசிக்கிறேன். ஆகையால் அவளைக் கரத்தால் தொட்டால் சுட்டுவிடுவேன்" என்றான்.

2-வது அத்தியாயம்.

அச்சமயம் ஆனந்தலிங் அவனை யொரே அறையில் பூமியில் விழும்படி செய்ய நினைத்தான். மறுபடி கோபத்தை யடக்கிக்கொண்டு, "அப்படி நினைக்க நீ சுத்த மூடனாயிருக்கவேண்டும். நான் தொடவேண்டிய காரணமொன்றுமேயில்லை. கிடக்கட்டும், இப்போது இறந்த ஆசாமியைக் காட்டினாய். இது சாதாரணமாய் தினம் உலகில் நடக்கிற சம்பவமே. என்னையேன் அழைத்து வந்தாய்? அதைக்கூறு" என்றான்.

கறுப்பண்ணன்:—முன்னமே கூறினேனே. இம்மர்மத்தைக் கண்டுபிடிக்கவென்று.

ஆனந்த:—"சரி. சங்கதியைக் கூறினுயல்லவா? என்ன மர்மம் நடந்திருக்கிறது? இப்பெண் முரட்டுத்தனமாய் கொல்லப்பட்டதாகத் தோன்றவில்லையே." என்றான். (தொடரும்.)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

பொது சமாச்சாரம்

பஞ்சாங்க அச்சுச்சுதந்தரம்.

துந்துபிஹு ஆவணிமீ ஆனந்தபோதினியின் 73-வது பக்கத்தில் "**அச்சுச்சுதந்தரம்**" என்ற தலையங்கமிட்டு ஒரு விஷயத்தைப்பற்றி வெளியிட்டிருந்தோம். அதில் நாம் பிரசுரித்த பஞ்சாங்கத்திலிருந்த விஷயங்களை நமது அனுமதியின்றி எடுத்துத் தமது பஞ்சாங்கத்தில் சேர்த்துக் கொண்டதற்காக சூளை சுந்தரவிலாச அச்சுக்கூட முதலாளியான ம-௱-௱-ஸ்ரீ P. T. மாசிலாமணி முதலியார் என்பவருக்கு பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட், ரூபா 20 அபராதம் செலுத்த வேண்டுமென்றும் தவறினால் 3 நாட்கள் வெறுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் அளித்த தீர்ப்பைப் பிரசுரித்திருந்தோம்.

குற்றவாளி அத்தீர்ப்பின் மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டார். 1923ஹு ஆகஸ்ட்மீ 7உ, ஸ்ரீமான்கள் கிருஷ்ணன், வாலெஸ் என்ற இரண்டு நியாயாதிபதிகளும், கீழ்க்கோர்ட்டில் விதித்த தண்டனை சரியானதே என்று கூறி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

இன்னொருவர் புத்தியையும் உழைப்பையும் செலவிட்டு எழுதிய விஷயங்களைத் தாங்கள் எழுதியதுபோல பிரசுரித்து அக்கிரம வழியில் பொருள் சம்பாதிக்கும் ஆசாமிகள் இதனால் எச்சரிக்கை யடைந்து நியாயமான வழியில் நடக்க முயல்வார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

ராஜ குடும்பத்தின் வரும்படி.

பிரிடிஷ் ராஜகுடும்பத்தின் செலவுக்கென்று பார்லிமென்டில் வருஷந்தோறும் ஒரு பெருந்தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. சக்ரவர்த்திக்கு 4-லக்ஷத்து 10-ஆயிரம் பவுன் கொடுக்கிறார்கள். இதில் ஒன்றரை லக்ஷம் பவுன் சக்ரவர்த்தியின் வீட்டு அதிகாரிகளின் சம்பளத்துக்கும் சுமார் 2-லக்ஷம் வீட்டுச் செலவுக்கும் போகிறது. சக்ரவர்த்தியின் தாயார் அலெக்ஸாண்ட்ரா ராணிக்கு 70,000 பவுன் கொடுக்கப்படுகிறது. கனாட்கோமனுக்கு 25,000 பவுன். வேல்ஸ் இளவரசருக்கு ராஜாங்க வரும்படியிலிருந்து ஒரு தொகையும் கொடுப்பதில்லை. அவருக்குச் சொந்தத்தில் பெரிய பூஸ்திதிகள் உண்டு. அவைகளிலிருந்து வருஷந்தோறும் கிட்டத்தட்ட 2-லக்ஷம் பவுன் கிடைத்து வருகிறது. சக்ரவர்த்தியின் மற்ற குமாரர்களுக்கு வருஷந்தோறும் 10,000 பவுன் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்குக் கல்யாணமானால் வருஷந்தோறும் 20,000 பவுன் கொடுத்து வருவார்கள். மேரி ராஜகுமாரிக்கு 21-வயது வரை 6,000 பவுன் கொடுத்து வந்தார்கள்.

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

உருத்ரோத்காரிஸு புரட்டாசிமீ-கலி 5025-சாலிவாகனம் 1846
பசலி 1333—கோல்லம் 1098-99—ஹிஜரி 1342
இங்கிலீஷ் 1923ஸு செப்டம்பர்மீ—அக்டோபர்மீ

புரட்டாசி	செப்டம்பர்மீ (1923ஸ்ரீ அக்டோபர்மீ)	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	17	திங்	சப்1-20	கேட்24-55	சித்60	ஷடசீதி புண்ணியகாலம்
			அ57-5			தூர்வாஷ்டமி
2	18	செவ்	நவ54-3	மூல23-0	அ23-0சித்	நந்தநவமி
3	19	புத	தச52-20	பூரா22-25	அமி60	கேஜலக்ஷிமி விரதம்
4	20	வியா	ஏ51-58	உத்23-3	சித்60	மத்வ, சர்வ ஏகாதசி
5	21	வெ	து52-45	திரு24-55	ம24-55சி	கல்கி துவாதசி
6	22	சனி	திர54-48	அவி28-3	சித்28-3அ	சனிப்பிரதோஷம்
7	23	ஞா	சது57-53	சதை32-10	சித்60	அனந்த விரதம்
8	24	திங்	○பௌ60	பூரட்37-20	ம37-20சி	உமாமஹேஸ்வர விரதம்,
						பௌர்ணமி
9	25	செவ்	பௌ1-53	உத்ரட்43-23	அ43-23சி	மாளயபக்ஷ ஆரம்பம்
10	26	புத	பிர6-53	ரேவ50-5	மர60	அசூன்யசயனவிரதம்
11	27	வியா	துதி11-5	அசு57-18	அ57-18சி	விதைவிதைக்க தான்யம்
12	28	வெ	திரி18-30	பர60	சித்60	[செலவிட
13	29	சனி	சது24-43	ப✲4-48	சித்4-48அ	கிருத்திகை
14	30	ஞா	பஞ்30-45	கிரு12-13	சித்60	
15	1	திங்	சஷ்36-18	ரோ19-15	அமி60	
16	2	செவ்	சப்40-33	மிரு25-15	சி25-15ம	
17	3	புத	அ43-30	திரு30-0	சித்60	
18	4	வியா	நவ44-38	புன33-3	அமி60	
19	5	வெ	தச44-38	பூச34-13	மர60	
20	6	சனி	ஏகா41-3	ஆயி33-28	ம33-28அ	
21	7	ஞா	து36-23	மக30-50	ம30-50சி	
22	8	திங்	திர30-8	பூர26-55	சித்60	
23	9	செவ்	ச 22-25	உத்20-45	அ20-45சி	சாவ-பிதுரு-மாளய
						அமாவாசை
24	10	புத	அ13-53	அஸ்14-10	ம14-10சி	மழை 6-க்குள்
25	11	வியா	பிர4-45	சித்6-58	சித்6-58அ	நவராத்திரி ஆரம்பம்
			துதி55-38	சுவா59-43		[றுக்க
26	12	வெ	திரி46-45	விசா52-50	சித்60	விதை விதைக்க, கதிர
27	13	சனி	சது38-38	அனு46-48	சித்60	மாசசதுர்த்தி விரதம்
28	14	ஞா	பஞ்31-30	கேட்41-53	ம41-53அ	சஷ்டி, உபாங்க லலிதா
						கௌரீ விரதம்
29	15	திங்	சஷ்26-0	மூல38-33	சி38-33ம	சரஸ்வதி ஆவாகனம்
30	16	செவ்	சப்22-10	பூரா36-53	சி36-53அ	யாத்திரை விலக்கல்

கே	20உ க-செ 23 ,, து-சுக் 27 ,, து-சனி		செ ராகு
		குரு	சூ-பு சு-ச

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
" ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.